பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | மாசி 25 | வியாழக்கிழமை | 09.03.2023 | கதிர் 120

## இனி அது ரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தை இம்மாதம் 19 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைந்த செயற்பாடு தொடர்பில் முடிவு எடுக்கப்படும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பிலான நடவடிக்கைகளால் தமிழ்க் கட்சிகளுக்குள் சில குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும், இது நிரந்தர முடிவுகள் அல்ல.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் உடனடிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்காக நாம் ஒன்றிணைந்தே செயற்பட வேண்டும்.

இப்படித் திருவாய் மலர்ந்திருக்கிறார் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா. எத்தனை தடவைதான் அவர் செயற்குழுவில் இந்த விவகாரத்தை எடுத்துக் குட்டுவாங்கப் போகிறாரோ தெரியவில்லை. இதற்கு முன்னரும் ஒரு தடவை அரசியல் குழுக் கூட்டத்தில் இந்த விவகாரம் ஆராயப்பட்டபோதும் ஒற்றுமையைவிட்டு விலகுவது தொடர்பில் முடிவெடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அறிவிக்கப்போக, இல்லையில்லை அப்படியொரு முடிவும் அங்கு எடுக்கப்படவில்லை செயற்குழுதான் முடிவெடுக்கும் என்று தெரிவித்தவர்தான் மவையர்.

பின்னர் செயற்குழுவும் அரசியல் குழுவின் முடிவை உறுதிப்படுத்தி மாவையரின் மூக்கை உடைத்தது. அதன் ☞ 2

## தீர்வைக் காணும் உண்மை நோக்கம் ரணிலுக்கு ஒருபோதும் கிடையாது

### கஜேந்திரகுமார் எம்பி இப்படித் தாக்குதல்



இலங்கையில் புரையோடிப்போயுள்ள தேசியப் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் உண்மையான நோக்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குகிடையாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற கலால் சட்டம் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்த அவர், ☞ 2

## கொழும்பு சட்டபீட மாணவர்கள் குழு முறைப்பாடு

கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டபீடத்தினைச் சேர்ந்த மாணவர்கள் குழுவினர் இலங்கை மனிதஉரிமைகள்ஆணைக் குழுவில்புதன்கிழமைபொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்தனர். ☞ 2

## ஊழியர்கள் பற்றாக்குறையால் போக்குவரத்து சேவை பாதிப்பு

ஊழியர்களின் பற்றாக் குறை காரணமாக தற்போது தொடருந்துமற்றும்இலங்கை போக்குவரத்துச் சபை சேவைகளில் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்க நேரிட்டுள்ளதாக போக்குவரத்து துறைசார் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால்நாளாந்தரயில் சேவைகள் சில நிறுத்தப் பட்டுள்ளன எனவும் ☞ 2

## ஜனாதிபதித் தேர்தலே ரணிலின் இலக்கு

### விமல் வீரவன்ச கூறுகின்றார்



பொருத்தமான தருணத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இலக்கு என்று தேசிய சுதந்திர முன்னணியின்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார். ☞ 2

## மாணவர்களின் நேற்றைய போராட்டமும் இராணுவம் வரவழைக்கப்பட்டு முடக்கம்

### 4 இடங்களில் கண்ணீர்புகை, நீர்த்தாரை தாக்குதல்கள்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் செவ்வாய்க்கிழமை முன்னெடுத்த போராட்டத்தின் மீது அரச படையினர் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைத் தாக்குதல் நடத்தியதைக் கண் டித்து புதன்கிழமை கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்த போராட்டமும் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு கண்ணீர்புகை மற்றும் நீர்த்தாரை தாக்குதல் நடத்தப் பட்டு முடக்கப்பட்டது.

போராட்டத்தில் திரண்டிருந்த மாணவர்கள் மீது நான்கு சந்தர்ப்பங்களில் கண்ணீர்புகை மற்றும் நீர்த்தாரை தாக்குதல்களை படையினர் மேற் கொண்டனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாண வர்கள் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது, கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்திற்குள் நுழைந்து நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குஎதிர்ப்புத்தெரிவித்து புதன்கிழமை எதிர்ப்பு போராட்டத்தை மாணவர்கள் நடத்தினர். ☞ 2

## 9 ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டில் கைது

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், மார்.08

இலங்கையில் இருந்து இந்தியா வழியாக வெளி நாட்டிற்குத் தப்பிச் செல்ல முயன்ற 9 பேர் தமிழ்நாடு காவல்துறையினரால்கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து தமிழகம் சென்று அங்கே தங்கியிருந்து வெளி நாடுகளிற்கு ☞ 2

## பெண்கள் உரிமைகளை வென்றெடுக்க பல திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன

### உலக மகளிர் தினத்தில் ஜனாதிபதி உரை

பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு பல்வேறுசெயற்றிட்டங்களை தொடங்கப்பட்டுள்ளன என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பட்டியலிட்டுள்ளார்.

பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ்விடுதியில்புதன்கிழமை இடம்பெற்ற உலக மகளிர் தின தேசிய விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவள் தேசத்தின் பெருமை எனும் தொனிப் பொருளில்பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. ஜனாதிபதி இந்த நிகழ்வில் மேலும் தெரிவித்ததாவது:

பெண்களின் உரிமைகளை மேம்படுத்தும் திட்டங்களை நாம் தொடங்கியுள்ளோம். அதுதான் இலங்கைக்கும் ஆசிய நாடுகளுக்கும் உள்ள வித்தியாசமாகும். இலங்கை குறித்து நாம் கவனம் செலுத்தும் போது 92 வருடங்களுக்கு முன்னர் எமது முதல் பெண் நாடாளுமன்றஉறுப்பினர்தெரிவுசெய்யப்பட்டார்.

1960 ஆம் ஆண்டு உலகின் முதல் பெண் பிரத[illegible] சிறிமாவோபண்டாரநா[illegible] தெரிவானார். ஆனால் அதிலிருந்து நாம் முன்னேற்றம் அடையவில்லை.இன்று சில நாடுகளில் ☞ 6

## களனி பல்கலை மாணவர்களின் போராட்டத்தின் மீதும் தாக்குதல்

களணி பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தின் மீதும் பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைத் தாக்குதல் நடத்தினர். புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கண்டி, கொழும்பு பிரதான வீதியில், களணி பல்கலைக்கழகத்திற்கு முன்னால் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் நடத்தினர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் போராட்டத்தின் மீது செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல்கள் மற்றும் கொழும்பு பல்கலைழக்கழக மாணவர்கள் மீது புதன்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குக் கண்டனம் தெரிவித்து இந்தப் போராட்டத்தை களனி மாணவர்கள் நடத்தினர்.

மாணவர்கள் பிரதான வீதிப் போக்குவரத்தை முழுமையாக தடை செய்யாதபோதும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தன.

இதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் அறிவித்தனர். அவர்கள் மறுத்த நிலையில் ☞ 2

## பெண்களை நினைவுகூர்ந்து நன்றி கூறிய ஜனாதிபதி

### நாணய நிதிய கடன் கிடைக்க உதவியதற்காக

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான பணி வெற்றியடைய உறுதுணையாக இருந்த பெண்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் சொகுசு விடுதியில் நேற்று இடம்பெற்ற உலக மகளிர் தின தேசிய விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவ்வுரையின் ஒரு கட்டத்தில் கடினமான ☞ 2

## தீர்வைக் காண்பது ரணிலின் கையில்

### தமிழ் அரசுத் தலைவர் மாவை தெரிவிப்பு




அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது, இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பது என்பன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையில்தான் உள்ளது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் ☞ 2

## நாட்டினது பொருளாதார வீழ்ச்சிக்கு பெண் எவரும் பொறுப்பாளி அல்லர்

### ஜனாதிபதி ரணிலின் சுட்டிக்காட்டு



நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு எந்தவொரு பெண்ணும் பொறுப்புக்கூற வேண்டியதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்லவோட்டர்ஸ் எட்ஜ் சொகுசு விடுதியில் புதன்கிழமை இடம்பெற்ற உலக மகளிர் தின தேசிய விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2022 உலக மகளிர் தினத்திற்கும் 2023 உலக மகளிர் தினத்திற்கும்

## உள்ளகப் பொறிமுறை வடக்கில் ஏற்பு என மனித உரிமைகள் ஆணைக்குழு சொல்வது அப்பட்டமான பொய்

### நாடாளுமன்றத்தில் சிறிதரன் எம்பி. உரை



வடக்கு மாகாண மக்கள் உள்ளகப் பொறிமுறைக்கு இணக்கம்தெரிவித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளமை அப்பட்டமான பொய்யாகும், ஆணைக்குழுவின் பொய்யான கருத்திற்கு இந்த உயரிய சபை ஊடாக கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என்றுதமிழ்அரசுக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

இந்த நாட்டில் நீதி இல்லை என்பதற்கு குருந்தூர் மலை விவகாரம் சிறந்த எடுத்துக் காட்டு. இதனால் தான் பாதிக்கப்பட்ட எம்மவர்களுக்காக சர்வதேச நீதிப் பொறிமுறையைக் கோருகிறோம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற கலால் சட்டம் ஒழுங்கு ☞ 2

## துறைமுகப் போராட்டங்களால் 17 கப்பல்கள் திரும்பி சென்றன

### நாடாளுமன்றத்தில் அமைச்சர் தெரிவிப்பு



துறைமுக தொழிற்சங்கங்களின் போராட்டம் காரணமாக கொழும்பு துறைமுகத்திற்கு வந்திருந்த 17 கப்பல்கள் திரும்பிச் சென்றதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த கப்பல்களை மீண்டும் துறைமுகத்திற்கு கொண்டு வருவதற்கு நான் பெரும் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பின்னர் கொஞ்சக் காலம் அமைதியாக இருந்தவர் இப்போது மீண்டும் ஒற்றுமைக் கோசத்துடன் செயற்குழுக் கதையைத் தொடங்கியிருக்கிறார்.

இப்படி அடிக்கடி செயற்குழுவைக் கூட்டுவதற்குப் பதில் அவர், கட்சியின் பெதுக்குழுவைக்கூட்டினால்நன்றாக இருக்கும். அவருக்குப் பதிலான தலைவராக யாரைத் தேர்வு செய்வது என்பது வரைக்கும் உள்ளே தீர்மானிக்கப்பட்டுவிட்ட நிலையில், முன்னாள் பங்காளிகளுடன் தொடர்ந்தும் ஒற்றுமை பேசுவதன் மூலம் அங்காவது தனது அரசியலைத் தொடர முடியுமா என்று பார்க்கிறார் போலிருக்கிறது.

கட்சித் தலைமைப் பதவி பறிபோய்விட்ட பிறகு பங்காளிக்கட்சித்தலைவர்களும்கூட அவரை இப்போதிருப்பது போன்று மதித்து நடப்பார்கள் என்று எண்ண முடியாது. குறைந்தபட்சம் அவர்களது கட்சிகளின் சார்பில் இவருக்கு தேர்தலில் போட்டியிட ஆசனமாவது கொடுப்பார்களா என்பதும் கேள்விக்குறிதான்.

ஒற்றுமையைப் பற்றி மாவையர் பேசுவதற்கு முன்னர்முன்னாள்பங்காளிகளுடன் தமிழ் அரசுக் கட்சிக்கு இன்றிருக்கும் உறவு நிலை பற்றி அவர் கொஞ்சமாவது சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும். யாழ்ப்பாணம் மாநகரசபையில்ஆனல்ட்டின் ஆட்சியைத்தக்கவைப்பதற்கு ஈபிடிபியின் ஆதரவைக்கேட்க குறைந்தபட்சம் தவராசாவை யாவது அணுக முடிந்த நிலை அவருக்கு சித்தார்த்தனிடமோ செல்வத்திடமோ இருக்கவில்லை என்கிற உண்மையை மறைத்துக்கொண்டுஒற்றுமை பற்றிப்பேசுவதில்பயனில்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வராக ஆனல்ட் பதவியேற்றதும், மணிவண்ணன் அணி உள்ளே வந்து எதிர்த்தால் அவரது வரவு-செலவுத் திட்டம் தோல்வியடையும் என்பது எல்லோருக்கும் தெரிந்தே இருந்தது. அந்த நிலையில் ஈபிடிபி ஆதரவு தருமா என்று தமிழ்அரசுக்கட்சிசார்பிலஓடிப் பார்த்தார்கள். இது ஆனல்ட் முதல் தடவை முதல்வராகப் பதவியேற்றபோதும்நடந்தது. இப்போதும் அது போன்றே ஈபிடிபியை அருட்டிப் பார்த்தார்கள். அதற்கு அந்தப் பக்கதில் இருந்து கீழே இருப்பவர்கள் பேசி என்ன பயன் தலைவர்களைப்பேசச்சொல்லுங்கள் பார்க்கலாம் என்று தெரிவிக்கப்பட்ட அடிப்படையில்வடக்குமாகாணசபையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவரானதவராசாவுடன் தொடர்புகொண்டமாவையர் ஆதரவு தரமுடியுமா என்று கேட்டார். அந்தப் பேச்சு வெற்றியளிக்கவில்லை என்பது வேறுவிடயம்.

அப்படி ஈபிடிபியிடம் ஆதரவு கேட்டச் சென்றபோது புளொட் மற்றும் ரெலோ வசம் 5 ஆசனங்கள் இருந்தன. அவற்றின் ஆதரவைக் தருமாறு மாவையர் கேட்டிருக்கவில்லை. அல்லது இரகசியமாகக் கேட்டும் அவர்கள் தரவில்லை. அப்படிப்பட்டவர்களுடன் இனியும் ஒற்றுமையாகச் செயற்படப்போவதாக ஏமாற்றித்திரிவதில் எந்த அர்த்தமும் இல்லை. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது என்றுவிட்டு முன்னேறி கட்சியை மீளக்கட்டமைக்கும் வழியைப் பார்ப்பதுதான் எல்லாவற்றுக்கும் நல்லதே தவிர, ஒற்றுமைக் கனவுகளில மிதப்பதால் எதுவும் நடக்கப்போவதில்லை.

- இடிமின்னல் -

## கொழும்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆர்ப்பாட்டங்களிலோ எதிர்ப்பு நடவடிக்கைகளிலோகொழும்பு பல்ககலைக்கழகத்தின் சட்டபீட மாணவர்கள் ஈடுபட்டிருக்காத நிலையில் அவர்கள் மீது பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைந்து பொலிஸார் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

இது சம்பந்தமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உரிய நடவடிக்கையை முன்னெடுத்து மாணவர்களின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அந்த முறைப்பாட்டில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரையில் ஓயப்போவதில்லைஎன்றும்மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் இந் தச் செயலை சட்டபீட ஆசிரியர்களும் வன்மையாகக் கண்டித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மார்ச்ஏழாம்திகதிகொழும்பு பல்கலைகழக வளாகத்துக்குள்ளும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் இடம்பெற்ற மனிதாபிமானமற்றகீழ்த்தரமானவன்முறை தாக்குதல்களை கொழும்பு பல்கலைகழகத்தின் சட்டபீட சட்டஆசிரியர்களானநாங்கள் கண்டிக்கின்றோம்.

பொலிஸாரும்கலகதடுப்பு பொலிஸாரும் கண்ணீர்ப் புகையை பயன்படுத்தி மேற்கொண்ட அந்தத் தாக்குதல் காரணமாக பல மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்தத்தாக்குதல்காரணமாக பல்கலைகழகத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கும் ஆபத்து ஏற்படும் நிலை காணப்பட்டது.

சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை நிலைநாட்டுவது தொடர்பாக அர்ப்பணிப்புடன் உள்ளவர்கள் என்ற அடிப்படையில் அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதை நாங்கள் கண்டிக்கின்றோம்.

நியாயபூர்வமான கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான பகுதி என பல்கலைகவளாக பகுதிக்கு காணப்படும் உரிமை மீறப்பட்டதையும் நாங்கள் கண்டிக்கின்றோம் - எனத் தெரிவித்துள்ளனர்.

## தீர்வைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மேலும்தெரிவித்ததாவது:

கடந்தஆட்சியின்தவறான பொருளாதார முகாமைத்துவத்தினால் நாடுவங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. பொருளாதார முன்னேற்றத்திற்காக ஏனைய நாடுகளின் உதவியை நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் ஆட்சியாளர்கள்கடனளிப்பவர்களுடன் பேச்சு நடத்தி இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தனது அரசியல் இருப்பை வலுப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார்.

ஜனாதிபதி தனது நற்பெயரை மேம்படுத்த முயற்சிக்கின்றார். கடந்த முறை அவர் நல்லிணக்கம் தொடர்பில் இனப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாகவும் கூறினார். அனைத்து கட்சி கூட்டத்தையும் நடத்தி அமைதியை ஏற்படுத்துவபர் போன்று செயற்பட்டார்.

ஆனால் உண்மையில் அதற்குஎதிரானவகையிலேயே செயற்பாடுகள் நடக்கின்றன. இப்படியிருக்கையில் வெளியில் நல்லிணக்கவாதியாக அவர் தன்னைக் காட்ட முயற்சிக்கின்றார்.

காலனித்துவ ஆட்சி காலத்திலேயே புராதன இடமாக அடையாளம் காணப்பட்ட இடம், மீண்டும் கட்டியெழுப்பப்படுகின்றது. இராணுவத்தினர் தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து மறைமுகமான திட்டங்களை மேற்கொள்வதாகக் கருதுகின்றோம். குருந்தூர்மலையில்எந்தவித நிர்மாணங்களுக்கும் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. எனினும் அதனையும் மீறி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இங்கு பௌத்த விகாரை அமைக்கப்படுகின்றது.ஆனால் பௌத்தர்கள் அங்கு இல்லை. மறுபுறம் மட்டக்களப்பில் மயிலத்தமடுவில் கால்நடை மேய்ச்சல் நிலமாக அடையாளம் காணப்பட்ட இடங்களாக 2010 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட இடங்களில் சிங்களவர்கள் குடியமர்த்தப்படுகிறார்கள். அமைச்சரவை பத்திரம் ஊடாக அது மேச்சல் நிலமாக அடையாளப்படுத்தப்பட்டது. தமிழ் முஸ்லிம் மக்கள் அதனை மேச்சல் நிலமாகப் பயன்படுத்துகின்றனர். ஆனால்இனரீதியில்இதனை பிரிக்கின்றனர்.

மாதுறு ஓயா வலது கரையில் இருக்கும் மக்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். இந்தப் பிரதேசங்களில் வாழும் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுகின்றனர். இதனை நிறுத்த வேண்டும்.

ஜனாதிபதி முழு உலகுக்கும் அமைதி ஏற்பாட்டாளராககட்டும்வேளையிலேயே இவ்வாறான சம்பவங்கள் நடக்கின்றன.

இதேவேளை யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கின்றனர். யாரென்றே தெரியாதவர்கள் அங்குள்ள ஏரிகளில் பண்ணைகளை நடத்தும் நிலைமை காணப்படுகின்றது. மீன் பிடிக்கென அமைச்சர் இருக்கின்றார். வெளிநாட்டு கடற் றொழிலாளர்கள் அங்கு வந்து மீன் பிடிக்க முடியும் என்று கூறுகின்றார். இவ்வாறான நடவடிக்கைகளை நாங்கள் கண்டிக்கின்றோம்.

இனவாத நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. வெளிநாட்டு நிறுவனங்கள் உதவிகளை வழங்கும்போது, அவர்கள் வழங்கும் பணம் இந்தப் பிரச்சினைகளைதீர்ப்பதற்காக பயன்படுத்தப்படும்என்றுஅறிவிக்க வேண்டும் - என்றார்.

## ஊழியர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் பற்றாக்குறையால்இலங்கைபோக்குவரத்து சபையினூடாக அதிகபட்ச சேவையை வழங்குவதிலும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

இதனால்தமது நாளாந்த பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்த முடியாத பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

"தொடருந்து சாரதிகளின் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கு ஓய்வு பெற்ற சாரதிகளை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக்கொள்ளபொதுச் சேவை ஆணைக்குழு" செவ்வாய்க்கிழமை அனுமதி வழங்கியதாக இந்த விடயம் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மாயாதுன்னே தெரிவித்தார்.

திணைக்களத்தின் இளநிலைஊழியர்களுக்குரியஅரச பொருளாதாரசெயலணிக்காக 2 ஆயிரத்து 800 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதாகவும்போக்குவரத்து அமைச்சின்செயலாளர் குறிப்பிட்டார்.

இதனிடையே, இலங்கை போக்குவரத்து சபைக்கான சாரதிகள் மற்றும்நடத்துநர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை இலங்கை போக்குவரத்து சபைக்கு சேவையில் இணைத்துக்கொள்ள நிதி அமைச்சிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது - என்றும்செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடத்தில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திறைசேரியின் செயலாளருக்குதேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்த தருணத்தில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தினை கூட்டியிருக்கின்றார்.

திறைசேரியின் செயலாளராக இருப்பவருக்கு ஜனாதிபதியின் கூட்டத்தினை புறமொதுக்கிவிட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்திற்குச் செல்வதற்கு வாய்ப்பில்லை.

ஆகவே, இந்தச் செயற்பாடுகளிலிருந்து தேர்தல் நடத்தப்படக்கூடாது என்பதில் ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கின்றார் என்பது தெளிவாகின்றது. அவருடைய கண்கின்படி, முதலில் ஜனாதிபதி தேர்தலையே நடத்த வேண்டும். அந்த தேர்தலை தனக்கு பொருத்தமான தருணத்தில் நடத்துவதையே அவர் இலக்காகக் கொண்டிருக்கின்றார் - என்றார்.

## 9 ஈழத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செல்லும் முயற்சியில் ஈடுபட்டோரேவேளாங்கண்ணிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

தனுஜன், ஜெனீபர், தினேஸ், யோகேஸ்வரி, துசியந்தன், முருகன், சதீஸ் ஆகியோரும் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர் என்று தெரியவந்தது.

வெளிநாடுசெல்வதற்காக இவர்கள் 17 லட்சம் இந்திய ரூபா செலுத்தியுள்ளனர் என்றும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

## மாணவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொழும்புபல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்கசம்மேளனத்தின்ஏற்பாட்டில் விரிவுரையாளர்கள், மற்றும் மாணவர்களின் பங்கேற்புடன் பல்கலைக்கழக வளாகத்தில் தொடங்கிய இந்த எதிர்ப்புப்போராட்டம் பின்னர், அமைதிப் பேரணியாக நகர்ந்தது.

கொழும்புப் பல்கலைக் கழக கலைப்பீடத்திற்கு அருகில் தொடங்கிய பேரணியானது, கொழும்பு ரோயல் கல்லூரி நோக்கி பயணித்தது. இச்சமயத்தில் தேசிய அருங்காட்சியத்துக்கு அண்மையில் செல்ல முயற்சித்தசுந்தர்ப்பத்தில்பேரணியில் கலந்துகொண்டவர்களைக் கலைந்துசெல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்தனர். எனினும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்த நிலையில், கலகத்தடுப்பு பிரிவினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசத் தொடங்கினர்..

பொலிஸாருடன் கலந்துரையாடி பேரணி நகர அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருந்தபோது மீண்டும் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது

இந்தத் தாக்குதலில் இருந்ததப்பிக்கபோராட்டத்தில் கலந்துகொண்டமாணவர்கள் கேம்பிரிட்ஜ் பிளேஸை சுற்றியுள்ளதனியார்வீதிகளுக்குள் சென்றுபதுங்கிக்கொண்டனர். சிறிது நேரததிலேயேமீண்டும் ஒருங்கிணைவதற்கு முயற்சித்தனர்.

அச்சமயத்தில் குறித்த பகுதிக்கு இராணுவத்தினர் அழைக்கப்பட்டதோடு,பேரணி தொடர்ந்தும் முன்னகர்ந்து செல்லமுடியாது என்று அறிவிக்கப்பட்டது.

இதனால் மாணவர்கள், கொழும்பு ரோயல் கல்லூரிக்கு அருகில் தரையில் அமர்ந்து மறியலில் ஈடுபட முயற்சித்தனர். அங்கும் பொலிஸார் அவர்கள் மீது மீண்டும் கண்ணீர்ப்புகை மற்றும்நீர்த்தாரைத்தாக்கதலை நடத்தினர்.

தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் அங்கிருந்து விலகி கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்திற்கு அருகில் மீண்டும் ஒன்றுகூடினார்கள். எனினும், இராணுவமும், பொலிஸாரும்அப்பகுதிஎங்கும் முற்றுகையிட்டிருந்த நிலையில் ஈற்றில் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## நாட்டினது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இடையே, நாட்டில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார வீழ்ச்சியே இதற்கு முக்கிய காரணம்.

பெண்களாகஇருந்தாலும் சரி, ஆண்களாக இருந்தாலும் சரி, இந்த நாட்டு மக்கள் படும் துன்பங்களை நான் இந்த நேரத்தில் நினைவுகூரத் தேவையில்லை. இதனை யார்பொறுப்பேற்கவேண்டும் என்ற விவாதம் தற்போது நாட்டில்நடைபெற்றுவருகிறது.

இந்த விவாதத்தில் பல்வேறு பெயர்கள் கூறப்படுகின்றன. அந்தப் பெயர்களை நான் குறிப்பிடவில்லை என்றாலும். அவர்களில் ஒரு பெண்ணின் பெயர்கூட இல்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். எனவே இந்த சம்பவத்தை பெண்கள் பொறுப்பேற்கத் தேவையில்லை - என்றார்.

## களணி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நீர்த்தாரைத் தாக்குதலைத் தொடங்கிய பொலிஸார், தொடர்ந்து கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

## துறைமுகப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முயற்சிகளை மேற்கொண்டேன் அவற்றில் சில கப்பல்களை மாத்திரமே என்னால் மீளக் கொண்டுவர முடிந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோது அவர், இதனைத்தெரிவித்தார்.

துறைமுகஊழியர்களின் போராட்டங்களால் கொழும்பு துறைமுகத்தின் வர்த்தகத்தினை இந்தியா, துபாய் மற்றும் சிங்கப்பூர் போன்ற அருகிலுள்ள துறைமுகங்களுக்கு திசைதிருப்பப்படும்நிலைமைகளையே உருவாக்கியது. எதிர்காலத்திலும் அவ்விதமான நிலைமைக்கே தள்ளப்படுவோம்.

கொழும்புத்துறைமுகத்திற்கு வருகை தந்து திரும்பிய கப்பல்களை மீண்டும் துறைமுகத்திற்கு கொண்டு வருவதற்காக கப்பல் முகவரகங்களுடன் ஆலோசித்தேன். ஆனால், அவற்றில் சிலவற்றை மட்டுமே கொண்டு வர முடிந்தது

துறைமுக ஊழியர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தினால், நமது துறைமுகம் முற்றாக செயலிழந்துபோகும். அதேவேளையில் நமக்கு நெருக்கமான நாடுகளில் உள்ள துறைமுகங்கள் செழிக்கும்.

துறைமுக ஊழியர்கள், ஏனைய அரச ஊழியர்களைப் போல் இல்லாமல், மாதச் சம்பளமாக 171,000, மூன்று வேளை இலவச உணவு, பெரும் மேலதிகக் கொடுப்பனவு மற்றும் பிற நன்மைகள் ஆகியவற்றைப் பெறுகின்றவர்கள் - என்றார்.

## பெண்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காலங்களில் பொருளாதார சவால்களை வெற்றிகொள்ள உதவிய இந்தியநிதியமைச்சர் நிர்மலா சீதாராம், அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜெனட் யெலன், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா ஆகியோருக்கு எனது நன்றிகள் - என்றார்.

அத்துடன், ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் உர்சுலா வொன் டெர் லேன், ஐரோப்பிய ஒன்றியத்தின் மத்திய வங்கியின் ஆளுநர் கிறிஸ்டின் லகார்ட் ஆகியோரும் இலங்கைக்கு கைகொடுத்தவர்கள் என்றார்.

## தீர்வைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பின்னர் தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைந்த செயற்பாடு தொடர்பில் முடிவு எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் மற்றும் சமகால நிலமைகள் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தை இம்மாதம் 19 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைந்த செயற்பாடு தொடர்பில் முடிவு எடுக்கப்படும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்தொடர்பிலானநடவடிக்கைகளால் தமிழ்க் கட்சிகளுக்குள் சில குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும், இது நிரந்தர முடிவு அல்ல.

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு மற்றும் உடனடிப் பிரச்சினைகளுக்கான தீர்வு களுக்காக நாம் ஒன்றிணைந்தே செயற்பட வேண்டும்.

ஏற்கனவே எமது பிரச்சினைகளைத்தீர்த்துகொள்வது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசி அதனை விரைவில் தீர்ப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம்,13ஆவதுதிருத்தத்தை அமுல்படுத்துவது எனப் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டு வாக்குறுதியும் வழங்கப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்குப்பௌத்த பிக்குகளே எதிர்த்து வருகின்ற நிலை காணப்படுகின்றது.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைபடுத்துவது, இனப்பிரச்சினை தீர்வு விடயங்களில் பௌத்த தேரர்களும், தென்னிலங்கை கட்சிகளும்நடந்துகொள்ளும்முறைகள் தொடர்பில் நாம் கவலை கொண்டுள்ளோம்.

இந்த விடயங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் ஜனாதிபதிதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவருடையநிலமைஎமக்குக்கவலை தருவதாக இருப்பதுடன் ஏமாற்றமாகவும்இருக்கின்றது.

இத்தகைய விடயங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதே கட்டாய தேவையாகவும் உள்ளது. இதனை விரைவில் நாம் செயற்படுத்தி ஒன்றிணைவோம் - என்றார்.

## மனித உரிமை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்கள் கடந்த பெப்ரவரி மாதம் வடக்கிற்கு வருகை தந்தனர். பல்வேறு தரப்பினரையம் சந்தித்துப் பேசினர். பின்னர் திடீரென ஜனாதிபதியிடம் மதிப்பீட்டு அறிக்கையை வழங்கினர்.

வடக்கு மக்கள் உள்ளக பொறிமுறையிலான விசாரணையை ஏற்பதாக அந்த அறிக்கையில்இலங்கைமனித உரிமைகள் ஆணைக்குழு அப்பட்டமான பொய்யை குறிப்பிட்டுள்ளது. இதனால் கவலையடைவதுடன், இந்த உயரியசபைஊடாகஅதற்குக் கடும் கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இலங்கைப் படையினரின் செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் உள்ளக பொறிமுறையை ஒருபோதும் ஏற்கவில்லை, ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை.

கடந்த 40 ஆண்டு காலமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பல உரிமைகளை இழந்துள்ளார்கள், ஆகவே வெளியகப் பொறிமுறை ஊடாகவே சிறந்த ஏற்றுக்கொள்ளகூடிய தீர்மானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நாட்டில் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து தமது உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கும் நிலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அப்பட்டமான முறையில் ஆட்சியாளர்களுக்குச்சார்பாகஅறிக்கை சமர்ப்பித்துள்ளமை அதன் மிக மோசமான தன்மையை வெளிப்படுத்தியுள்ளது, இதற்கு எமது கடும் கண்டனத்தை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2022 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானம் ஊடாக உள்ளக பொறிமுறை விசாரணையை தாம் எதிர்ப்பதாக இலங்கைக்கானஐக்கிய நாடுகள் சபையின் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை விவகாரத்தில் உலகத்தை ஏமாற்றும் போக்கில்தான் அரசாங்கம் செயற்படுகிறது.

போர்க் குற்றங்கள் எதனையும் இலங்கை இராணுவம் செய்யவில்லை என்றால் இலங்கை ஏன் சர்வதேச விசாரணைக்கு அச்சமடைகிறது? மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை செய்த தரப்பினர் நீதிபதியாக இருந்து செயற்படும்போது எவ்வாறு நியாயத்தை பெற்றுக்கொள்ள முடியும்?

இந்த நாட்டில் நீதி என்பதொன்று கிடையாது. இதற்கு சிறந்த உதாரணமாக குறுந்தூர்மலைவிவகாரத்தை குறிப்பிட முடியும். குறுந்தூர் மலையில் விகாரை அமைக்கும் பணிகளுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளபோதும் ஒரு தரப்பினர் நீதிமன்றத் தீர்மானத்துக்கு எதிராக செயற்படுகிறார்கள்.

ஆகவே இந்த நாட்டில் எவ்வாறு உரிமை இழந்த தமிழ் மக்கள் நியாயமான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும், இதன் காரணமாகவே உலகநீதிப்பொறிமுறையைக் கோருகிறோம் - என்றார்.




காலைக்கதிர்
Kalaikkathir

# பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இன்று முதல் பணிப்புறக்கணிப்பு

நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அனைவரும் இன்று முதல் மறு அறிவித்தல் வரை விரிவுரைகளைப் புறக்கணிக்கவுள்ளனர் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இந்த ஆட்சியால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் வருமான வரி அறவீட்டுக்கு எதிராகவும் ஆட்சியாளர்களின் ஆரோக்கியமற்ற செயற்பாடுகளுக்கு எதிராகவுமே இந்த முடிவுக்குத் தாங்கள் தள்ளப்பட்டிருப்பதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் றொகான் லக்சிறி தெரிவித்தார்.

இந்தத் தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்பில் அவர் அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும், வரி வசூலிப்பினால் எமது உறுப்பினர்கள் உட்பட நாட்டிலுள்ள பல்வேறு தரப்பினரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த முறையற்ற வரி வசூலிப்புத் தொடர்பில் நாம் எமது சகோதர தொழிற் சங்கங்களுடன் இணைந்து பல்வேறு போராட்ட வடி வங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந் ததுடன், அரசுக்கு தீர்வு முன்மொழிவையும் வழங்கி யிருந்தோம்.

துரதிஷ்டவசமாக அரசு எமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை வழங்கவில்லை. அதனால் வேறுவழியின்றி, அரசு எமது கோரிக்கைக்குச் செவிசாய்க்கும் வரையில் - ஆகக் குறைந்தது இது தொடர்பில் பேசி முடிவெடுக்கும் வரையி விரிவுரைகளில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று எமது பிரதிநிதிகள் சபை முடிவெடுத்துள்ளது என்றும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கான கொடுப்பனவு மற்றும் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி இன்று நண்பகல் 12 மணிக்கு அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை நடாத்தவுள்ள அனைத்துப் பல்கலைக்கழகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் மற்றும் தொழிற்சங்கக் கூட்டுக்குழு ஆகியன எதிர் வரும் 15 ஆம் திகதி ஒரு நாள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன.

## பெண்களையும் உள்வாங்கும் வகையில் வங்கி முறை தராளமயமாகவேண்டும்

### உலக மகளிர் தின நிகழ்வில் பிரதமர் தெரிவிப்பு



பெண்களை வங்கி முறைக்குள் உள்வாங்கக்கூடிய வகையில் இலங்கையில் வங்கி முறை தாராளமயமாக்கப்பட வேண்டும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் விடுதியில் நேற்று இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின தேசிய விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வெளியிடப்பட்டுள்ள பெண்கள் தொடர்பிலான கொள்கையானது இலங்கைப் பெண்களுக்குப் பெரும் முன்னோக்கிய படியாகும். .

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஆட்சி நாட்டை முன்னேற்றுவதற்கு மிகவும் பொறுமையாகப் படிப்படியாக செயற்பட்டுள்ளது என்பது தற்போது தெளிவாகியுள்ளது. அந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் செயல்முறைக்கு பெண்களாகிய நீங்கள் பலம் தருகிறீர்கள்.

பெண்கள் வலுவூட்டல் என்ற இலக்கை அடைவதற்கு பெண்களை வங்கி முறைக்குள் பிரவேசிக்கக்கூடிய வகையில் இலங்கையில் வங்கி முறை தாராளமயமாக்கப்பட வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன். இதன்படி, இலங்கையில் உள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் வங்கிக் கணக்கைத் திறப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படும் - என்றார்.

## பெண்களை மரியாதையுடன் பாதுகாக்க வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து

இலங்கையின் 52 சதவீதமான பெண்களையும் மரியாதையுடன் பாதுகாக்க வேண்டுமென பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் விடுதியில் புதன்கிழமை இடம்பெற்ற உலக மகளிர் தின தேசிய விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் சிரத்தையுடன் உழைத்த நிலையில் பெண்கள் சாசனத்தை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. சர்வதேச மகளிர் தினத்தன்று அவருக்கு அதை வழங்குவது வரலாற்று சிறப்பு மிக்கதாகும்.

சமூகத்தில் பெண்கள் தனியாக இருக்கக் கூடாது. எந்தத் தொழிலை செய்வதாக இருந்தாலும் அவர்கள் இந்நாட்டின் குடிமக்கள். ஒரு நாட்டின் பெருமை பெண்கள் என்பதை புரிந்துகொண்டு இந்த நாட்டில் 52 சதவீதமாக இருக்கும் பெண்களை மரியாதையுடன் பாதுகாக்க வேண்டும் - என்றார்.



பிரதமர் தினேஷ் குணவர்தன, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பெஸ்குவல், சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அறம்பேபொல, சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுதர்னி பெர்னாண்டோ, யாதாமினி குணவர்தன, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங், இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி, வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள், பெண்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி யமுனா பெரேரா உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வேடிக்கைக் கதைகளை கேட்டுச் சலித்துவிட்டது

நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் (ஜனாதிபதி) முறைமையால் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட அழிவு இனியும் ஏற்படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் நான் இருக்கின்றேன்.

நிறைவேற்று அதிகாரத்தை வைத்துக்கொண்டு இப்போது ரணில் விக்கிரமசிங்க செய்வதைப் பாருங்கள். தேர்தல்கள் ஆணையாளர் தேர்தலை அறிவிக்கின்றார். ரணில் இல்லை என்கின்றார். அந்த நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியே ரணில் இவ்வாறு செய்கின்றார்.

இந்த நிறைவேற்று அதிகாரம் இந்த நாட்டுக்குச் செய்த அநியாயம் அதிகம். நான் அரச தலைவராக இருந்தால் இறுதி நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் நானாகத்தான் இருந்திருப்பேன்.

இவ்வாறு சொல்லியிருப்பவர் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமா.

அவருடைய கருத்துக்களில் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால், இலங்கையில் அரசியல்வாதிகள் இந்தக் கதையைக் கூறும்போது வேடிக்கை உணர்வும் பச்சாதாபமும்தான் வருகின்றன. இந்த நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையை ஒழிக்கவேண்டும் என்று யார்தான் சொல்லவில்லை. அல்லது ஒழிப்போம் என்று யார்தான் வாக்குறுதியளிக்கவில்லை?

முன்னாள் அரச தலைவரான சந்திரிகா, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ச என்று எல்லோருமே சொல்லியிருக்கிறார்கள். தாங்கள் பதவிக்கு வந்ததும் நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையை ஒழிப்போம் என்று. ஆனால் செய்ததில்லை. தங்கள் பதவிக் காலம் முழுவதும் அந்த அதிகாரங்கள் முழுவதையும் பயன்படுத்துவதிலேயே அவர்கள் சுகம் கண்டார்கள். அவர்களில் ஒரு சிலர் அந்த அதிகாரங்களை இன்னும் வலுப்படுத்தித் தமது அதிகாரத்தை வானளாவகிக் கொண்டார்கள்.

இந்த நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையை உருவாக்கியவரான ஜே.ஆர்.ஜெவர்த்தன, ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் ஆக்குவதைத் தவிர மற்றைய எல்லா அதிகாரங்களையும் தான் கொண்டிருக்கிறார் என்று சொல்லியதாக ஒரு கதையாடல் உண்டு. அவரே அப்படிச் சொல்லியிருந்தால், எஞ்சியிருந்த அதிகாரங்களையும்கூட அரசமைப்பின் 21ஆவது திருத்தம் ஊடாக மேலும் பல அதிகாரங்களையும் தன் வசப்படுத்திக்கொண்ட கோட்டாபய என்ன நினைத்திருப்பார்?

இன்று அரச தலைவராகியிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவும் 2015இல் இந்த முறைமையை ஒழிக்கப்படவேண்டும் என்று தீவிரமாகப் பேசித் திரிந்தவர்தான். மைத்திரிபால சிறிசேனவோடு சேர்ந்து ஆட்சியைப் பிடித்துப் பங்குபோட்டுக்கொண்டபோது, அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூலம் அரச தலைவரின் அதிகாரங்களைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தவர்.

ஆனால், தான் அரச தலைவரானதன் பின்னர் அரசமைப்பின் 19ஆவது திருத்தம் அப்படியே திரும்பக் கொண்டுவரப்படும் என்று வாக்குறுதியளித்தார். ஆனால் 21ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தபோது அது 19 ஆவது திருத்தத்தைப் போன்று இல்லை என்று அண்மையில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியிருந்தது.

நிறைவேற்று அதிகாரத்தையும் நாடாளுமன்ற அதிகாரத்தையும் சமன்செய்வதற்காக உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்களுக்கு உரியவர்களை நியமிக்கும் அதிகாரத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் தனது பிடியை இப்போதும் இறுக்கி வைத்திருக்கிறார் என்பதை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியிருந்தது. ரணில் கூறியபடி 19ஆவது திருத்தத்தின் மூலம் அரச தலைவரிடமிருந்து பறிக்கப்பட்ட சில அதிகாரங்கள்கூட 21ஆவது திருத்தத்தின் மூலம் மீண்டும் பறிக்கப்படவில்லை என்பதை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்கூடப் பல தடவைகள் கூறியிருக்கிறார்.

இப்படிப் பதவிக்கு வரும் வரைக்கும் இந்த நிறைவேற்று அதிகார முறையை ஒழிக்கவேண்டும் என்று கூறுபவர்கள், பின்னர் அதிகாரத்திற்கு வந்ததும் அதனைக் கைவிடாது இன்னும் வலுப்படுத்தவே முயன்றிருக்கின்றார்கள். இதோ இன்று ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது குறித்து மறந்தும் வார்த்தைகளை உதிர்ப்பதில்லை. பதிலாக அதிகாரத்தை வைத்துக்கொண்டு போராட்டங்களை அடக்குவேன், ஆட்சியைக் கவிழ்க்க இடமளிக்கமாட்டேன் என்று வீர வசனங்களைக் கூறிக்கொண்டிருக்கிறார்.

இத்தகையதொரு பின்னணியில் நிறைவேறு அதிகார ஆட்சிமுறையை ஒழிக்கவேண்டும் என்று டலஸ் அழகப் பெரும கூறுவது வேடிக்கையாக அன்றி வேறெதுவாக அமையமுடியும்!

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையால்

# இந்நாட்டுக்கு ஏற்பட்ட அழிவு இனியும் ஏற்படவே கூடாதாம்



நாட்டுக்குப் பொருத்தமான அரசமைப்புஒன்றுஉருவாக்கப்படவேண்டும். அந்த அரசமைப்பின் ஊடாக நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையால் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட அழிவு இனியும் ஏற்படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் நான் இருக்கின்றேன்.

நிறைவேற்று அதிகாரத்தை வைத்துக்கொண்டு இப்போது ரணில் விக்கிரமசிங்க செய்வதைப் பாருங்கள். தேர்தல்கள் ஆணையாளர் தேர்தலை அறிவிக்கின்றார். ரணில் இல்லை என்கின்றார். அந்த நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியே ரணில் இவ்வாறு செய்கின்றார்.

இந்த நிறைவேற்று அதிகாரம் இந்த நாட்டுக்குச் செய்த அநியாயம் அதிகம். நான் ஜனாதிபதியாகி இருந்தால் இறுதி நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி நானாகத்தான் இருந்திருப்பேன்.

1994 இல் இருந்து போட்டியிட்ட எல்லா ஜனாதிபதி வேட்பாளர்களும் முதலில் வழங்கிய வாக்குறுதி நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்பதுதான். ஆனால், எந்த ஜனாதிபதியும் அதைச் செய்ததில்லை.

நாட்டுக்குப்பொருத்தமானஅரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அந்த அரசமைப்பின் ஊடாக நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும்.

ரணில், மஹிந்த, மைத்திரி, சந்திரிகா இப்படி எல்லோருக்கும் சொல்கின்றேன். மீண்டும் ஜனாதிபதியாவதற்கு முயற்சிக்க வேண்டாம். அடுத்த தலைமுறையிடம் நாட்டை ஒப்படைப்போம். இப்போது நாட்டுக்குத் தேவை புதிய முறைமையாகும். - என்றார்.

# பிள்ளையானின் சூழுரை

வரலாற்றில் மிகவும் கஷ்டப்பட்டு வந்த மக்களை தூக்கி நிமிர்த்துவதற்கு எந்த நேரத்திலும் எந்த முடிவினையும் எடுக்ககூடியவன் நான். அதனால்தான் இவ்வளவு பிரச்சினைக்கும் மத்தியிலும் அரசாங்கத்துடன் நிற்கின்றேன் என மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

விவசாயிகளின் நெல்லைக் கொள்வனவு செய்து அதனை அப்பகுதியில் உள்ள பொருளாதார நெருக்கடியில் வறுமை நிலையில் உள்ள மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் தேசிய திட்டத்தின் கீழான முதல் நிகழ்வு புதன்கிழமை மட்டக்களப்பில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடியில் வாழும் மக்களை நோக்காகக் கொண்டு ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 10 ஆயிரத்து 151 குடும்பங்களுக்கான இரண்டு மாதங்களுக்கு தேவையான 20 கிலோ அரிசி வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகத்தில் இது தொடர்பான நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் -

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நெல் கொள்வனவுக்காக 53 கோடி ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. அரசாங்கம் பெரும் செலவு செய்து மக்களுக்கு அரிசி வழங்குவதற்காக இந்தத் திட்டத்தை முன்னெடுக்கின்றது.

அரச அதிகாரிகள் மற்றவர்களை பதற்றப்படுத்தாமல் இங்குவந்து மக்களுக்கு சேவையாற்றவேண்டும். எனக்குதரப்பட்ட அதிகாரத்தில் யாரையும் விளையாட அனுமதிக்கமாட்டேன். மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய வாக்கினால் மக்களால் தெரிவுசெய்ய்பபட்டவன் நான். அந்த ஆணையை கபளீகரம் செய்வதற்கு அனுமதிக்கமாட்டேன்.

வரலாற்றில்மிகவும்கஷ்டப்பட்டுவந்த மக்களை தூக்கி நிமிர்த்துதற்கு எந்த நேரத்திலும் எந்த முடிவினையும் எடுக்ககூடியவன் நான். அதனால்தான் இவ்வளவு பிரச்சினைக்கும் மத்தியிலும் அரசாங்கத்துடன் நிற்கின்றேன்.

பிள்ளையான் இருக்கும் காலத்தில் நீங்கள் வேலைசெய்யவேண்டும், இல்லையென்றால் இடமாற்றம் பெற்றுச்செல்லமுடியும். நான் மிகவும் கஸ்டப்பட்டு துன்பப்பட்டு இந்த இடத்திற்கு வந்துள்ளேன்.

இன்றுள்ள நிலைமையினை சிந்திக்காமல் எதிர்கால சமூகம் தொடர்பில் சிந்தித்து மாவட்டத்தினை முன்னேற்றக்கூடியவாய்ப்பாகபயன்படுத்திக்கொள்ள வேண்டும். அரசியலுக்கு அப்பால் கிழக்கு மாகாணத்தின் பொருளாதார இருப்புக்காக செயலாற்ற முன்வாருங்கள் என்ற அழைப்பினைவிடுக்கின்றேன். - என்றார்.

# பிரதமர் ரணில் தாயாரித்த குண்டு கோட்டாவின் கைகளில் வெடித்தது

## அம்பலப்படுத்தினார் உதய கம்மன்பில

கோட்டாவின் கைகளில் வெடித்த குண்டுக்கு காரணமாக இருந்தவர் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவே. தற்போது அவர் வைத்துள்ள குண்டு அடுத்த ஆட்சியாளரின் கைகளில் நிச்சயம் வெடிக்கும் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருந்த 2015, முதல் 2019ஆம் ஆண்டு வரையில் சர்வதேசத்திடமிரந்து பெற்றுக்கொண்ட பெருந்தொகையான கடன்கள் குண்டுகளாகி ஜனாதிபதியாக கோட்டாபயவின் கைகளுக்கு அதிகாரம் சென்றவுடன் வெடித்தது.

இதனால் நாடு பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்கிக்கொண்டது. இந்நிலையில் இதனை மீட்பதற்காக தற்போது ஜனாதிபதி பதவியினைப் பெற்றுக் கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, மீண்டும் குண்டொன்றை வைக்கவுள்ளார்.

தற்போது நெருக்கடிகளைப் போக்குவதற்காகஅவர்பெற்றுக்கொள்ளும்குண்டு, அடுத்த ஆட்சியாளரின் கைகளுக்குச் சென்றவுடன் நிச்சியம் வெடிக்கும். அப்போது நாடு தற்போதைய நிலைமையை விடவும் மிகவும் மோசமான நிலைமைக்கு முகங்கொடுக்கும்.

அச்சமயத்தில் ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் வாழ்க்கைக்கு ஓய்வு வழங்கியிருப்பார். - என்றார்.

# சஜித் அணி நடத்திய மகளிர் தின நிகழ்வு





ஐக்கிய மகளிர் சக்தி ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தின நிகழ்வுநேற்றுகொழும்புவிஹார மகாதேவி திறந்தவெளி அரங்கு வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அவரது பாரியார் ஆகியோர்தலைமைதாங்கினர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உத்தியோகபூர்வ குறியீட்டு நிறமும், செம்மஞ்சள் பூசுதலும் நேற்று இடம்பெற்றது. செம்மஞ்சல் நிறம் பெண்களின் வன்முறைக்கு எதிரான அடையாளமாகும்.



காலைக்கதிர்
Kalaikkathir

# வேலை நிறுத்தப் போராட்டங்களால் யாழ்.போதனா நோயாளர்கள் சிரமம்!

யாழ்ப்பாணம், மார்ச் 09

நாடு முழுவதும் ரீதியில் ஒன்றிணைந்த சுகாதார தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தப்போராட்டதால்வைத்தியசாலைக்கு வருகைதந்த நோயாளிகள், பொதுமக்கள் பல இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் ஒன்றிணைந்த சுகாதார தொழிற்சங்கங்களால் மருந்து தட்டுப்பாட்டை நீக்கு, வரிக்கொள்கையை மீளப்பெறு, மேலதிக கொடுப்பனவுக்கான வரையறைகளை நீக்கு என்பன உள்ளிட்ட 8 கோரிக்கைகளை முன்வைத்து பாரிய வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கை முழுவதும் உள்ள 33 தொழிற்சங்கங்கள் இந்த வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில் யாழ்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமையால் வைத்தியசாலைக்கு வருகைதந்த நோயாளிகள், பொதுமக்கள் பல இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வைத்தியசாலைக்கு கொண்டுவரும் நோயாளர்களை சிகிச்சைப் பிரிவுகளுக்கு கொண்டு செல் வதற்குகூட வைத்தியசாலை ஊழியர்கள் இன் மையால் பொதுமக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டனர்.

மேலும் பொதுமக்கள் நீண்டநேரமாக வரிசையில் காத்திருந்தமையையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

# இந்த ஆண்டுக்குள் மின்சார கட்டணத்தை குறைக்கலாம்!

## அமைச்சர் காஞ்சன நம்பிக்கை



புதிய மின்சார உற்பத்தித் திட்டத்துக்கு, எதிர்க்கட்சிகள் உட்பட அனைவரும் ஆதரவளித்தால் எதிர்வரும் ஜூலை மாதம் மின் கட்டணத்தை குறைக்க முடியும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனைத் தெரிவித்தார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் கடும் ஆட்சேபனைக்கு அமைவாக அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளதாக காஞ்சன விஜேசேகர கூறினார்.

மின்சார சபையின் இழப்பை ஈடுகட்ட கட்டணம் உயர்த்தப்படவில்லை என்றும் மின்சார உற்பத்தி திட்டத்தை சரியான முறையில் செயற்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

மின்சார சபை ஊழலை குறைக்க ஆலோசனைகளை வழங்கி உள்ளதாகவும் ஆனால் அதற்கு எதிராக சிலர் செயற்படுகின்றனர் என்றும் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கட்டணம் வசூலிப்பதால், தொடர்ந்தும் மின்சாரம் வழங்க முடிந்தது என்றும் மின் உற்பத்தி திட்டத்தை செயற்படுத்தினால், டிசெம்பருக்குள் மின் கட்டணத்தை குறைக்க முடியும் என காஞ்சன விஜேசேகர கூறினார்.

# எழுதாரகை பயணிகள் கப்பல் இறங்குதுறையிலிருந்து நகர்வு

அண்மையில் இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாய்த்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைய எழுதாரகை பயணிகள் கப்பல் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் இடம்பெற்ற குறித்த முன்னாய்த்த கூட்டத்தில், எழுவைதீவு மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக, பழுதடைந்த நிலையில் உள்ள எழுதாரகை கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அதுதொடர்பில் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில், கப்பலை திருத்தி சேவையில் ஈடுபடுத்தும் வரையில், பொது மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாத வகையில் பாதுகாப்பான இடத்தில் கப்பலை நிறுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு, வடக்கு மாகாணத்துக்கான கடற்படை தளபதியிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் முன்வைத்தார்.

அதற்கமைய எழுதாரகை கப்பல், எழுவைதீவு இறங்குதுறை பகுதியில் இருந்து புதன்கிழமை கடற்படையினரால் அகற்றப்பட்டு பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.




# தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தயாராகுக

## மொட்டுவின் உறுப்பினர்களிடம் மஹிந்த நேரில் வேண்டுகோள்



உள்ளூராட்சி சபைத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தயாராகுங்கள்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்குத் கட்சி தலைவரான மஹிந்த ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார்.

மொட்டுக் கட்சியின் விசேட கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

இதில் மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை, மாவட்ட தலைவர்கள், கட்சியின் பிரதான செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றிருந்தனர். மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போதே தேர்தல் பணியை ஆரம்பிக்குமாறு மஹிந்த ராஜபக்ஷவால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி ரணிலுக்கு சார்ள்ஸ் எம்.பி. பாராட்டு

## பொருளாதார மீட்சிக்காக உழைத்தாராம்



பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி மற்றும் அதிகாரிகள் முன்னெடுக்கும்வேலைத்திட்டங்களைவரவேற்கிறோம். சிறந்த திட்டங்களை முழுமையாக வரவேற்போம். இலங்கை, இந்திய மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணுமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்திக்கொள்கிறோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கலால் சட்டம் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி இந்தச் சபையில் உரையாற்றும்போது, நிதி அமைச்சர் என்ற வகையில் தானும் மத்திய வங்கி ஆளுநரும் சர்வதேசநாணயநிதியத்தின் முன்மொழிவுகளில் கையெழுத்திட்டு நிறைவேற்றியதாக நாட்டு மக்களுக்கு அறிவித்திருந்தார்.

இதனை நல்ல விடயமாக நாங்கள் பார்க்கின்றோம். பொருளாதார ரீதியில் அவரினதும், அவரின் அதிகாரிகளினதும் திறமையாக இதனைப் பார்க்கின்றேன். பொருளாதார நிலைமைகளுக்கு ஈடுகொடுப்பதற்காக முன்னெடுத்த இந்த வேலைத்திட்டங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

குறைபாடுகளைக் கூறினாலும், நல்ல விடயங்களுக்கு நாங்கள் நன்றி கூற வேண்டும். ஜனாதிபதியிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். அதில் வடமாகாணத்திலுள்ள கடற்பரப்பில் வெளிநாட்டு மீனவர்கள் மீன் பிடிப்பதால் எங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இது தொடர்பில் நிரந்தரத் தீர்வை ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்திய மீனவர்களுக்கு எமது கடலில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுவதை தொடர்ந்து வடக்கில் மீனவர்களிடையே கொந்தளிப்பு நிலைமை காணப்படுகிறது.

எமது மீனவர்களுக்கு கடலுக்குச் செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது. வெளிநாட்டவர்களுக்கு எமது கடலில் மீன் பிடிக்க அனுமதி வழங்குவதென்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நானும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் ஜனாதிபதியை சந்தித்து வடக்கு மீனவர் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்துமாறு கூறியிருந்தோம். அது தொடர்பில் கலந்துரையாட நேரமொன்றை ஒதுக்குவதாகக் கூறியுள்ளார்.

ஒரு நாட்டைப் பொருளாதாரத்தில் இருந்து மீட்க வேண்டுமாயின், அந்த மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அவ்வாறு செய்யாமல் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. என்றார்.

# மாணிக்கக் கல் கடத்திய இருவர் செவ்வாய் கைது!

மட்டக்களப்பு கல்லடி பிரதேசத்தில் இருந்து கொழும்பிற்கு ஓட்டோவில் மாணிக்கக் கல் ஒன்றை கடத்திச் சென்ற இருவரை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து கும்புறுமூலை சந்தியில் வாழைச்சேனை பொலிஸாருடன் புலனாய்வு பிரிவினர் சம்பவதினமான செவ்வாய்க்கிழமை இரவு கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது, மட்டு கல்லடியில் இருந்து ஓட்டமாவடி நாவலடிசந்திவரை ஓட்டோவில் சென்று அங்கிருந்து பஸ் மூலம் கொழும்பிற்கு சட்டவிரோதமாக மாணிக்கக் கல்லை கடத்தி செல்ல முற்பட்ட இருவரை கண்காணிப்பில் ஈடுபட்டுவந்த பொலிஸார் மடக்கிபிடித்து இருவரை கைது செய்ததுடன் சுமார் 5 கோடி ரூபா பெறுமதியான மாணிக்கக் கல்லையும் ஓட்டோ ஒன்றையும் மீட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கல்லடி மற்றும் திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இரு தரப்பு கடன் வழங்குநர்களிடமிருந்து இம்மாதம் 500 கோடி டொலர் எதிர்பார்ப்பு!

## ஜனாதிபதி தெரிவிப்பு

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சகல தரப்பினரிடமிருந்தும் சாதகமான பதில் கிடைக்கப் பெற்றுள்ளமையின் பிரதிபலனாக, இந்த மாதத்துக்குள் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய இரு தரப்பு கடன் வழங்குநர்களிடம் இருந்து 500 கோடி டொலர் கிடைக்கப் பெறும் என எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தினார் என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு புதன்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்காக கடந்த ஓராண்டு காலமாக சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் பல பேச்சுகளை அரசாங்கம் முன்னெடுத்திருக்கின்றது. அதற்கமைய இலங்கையின் கடன் மீளச் செலுத்தல் நடவடிக்கைகளுக்காக பிரான்ஸின் லசார்ட் நிறுவனம் மற்றும் கிளிபர்ட் ஹான்ஸ் ஆகிய நிறுவனங்களின் சேவைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகளின் பிரதிபலனாக இந்தியா , பரிஸ் கிளப் நாடுகள் மற்றும் சற்று கால தாமதமாக சீனாவும் கடன் மறுசீரமைப்பிற்கான தமது நிதி உத்தரவாதங்களை வழங்கின. அதற்கமைய கடந்த ஆண்டு செப்ரெம்பரில் சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட அதிகாரிகள் மட்ட இணக்கப்பாட்டை, பணிப்பாளர் சபை கலந்துரையாடலுக்குக் கொண்டுசெல்வதற்கான வாய்ப்பு தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது.

துரதிஷ்டவசமாக இந்த வெற்றியை எம்மால் பெற்றுக்கொள்ள முடியாமல் போயிருந்தால், நாடு பாரதூரமான வீழ்ச்சியை எதிர்கொண்டிருக்கும். எவ்வாறிருப்பினும் தற்போது அந்த அபாயத்தைக் கடந்துள்ளோம். ரூபாவின் பெறுமதி அதிகரித்து வருகிறது. அந்நிய செலாவணி இருப்பும் அதிகரித்து வருகிறது. இதன் நன்மை அனைத்து மக்களையும் சென்றடைகிறது. சீனி, பருப்பு, பெரிய வெங்காயம் உள்ளிட்டவற்றின் விலைகள் குறைவடைந்துள்ளன.

இந்நிலையில் இந்த மாதத்துக்குள் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய இரு தரப்பு கடன் வழங்குநர்களிடம் இருந்து 500 கோடி



டொலர் கிடைக்கப் பெறும் என எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு அறிவித்தார். - என்றார்.

# 3 பிள்ளைகளுக்கும் நஞ்சு கொடுத்து தானும் தவறான முடிவெடுத்த தந்தை

## கம்பளையில் உறவினர்களால் மீட்பு

நபர் ஒருவர் தனது மூன்று பிள்ளைகளுக்கும் நஞ்சை கொடுத்து தானும் நஞ்சருந்தி தற்கொலைக்கு முயன்ற நிலையில் கம்பளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கம்பளை தெல்பிட்டிய செவனக் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற மேற்படி சம்பவத்தின் போது 4 வயது ஆண் பிள்ளையும் 7 மற்றும் 13 வயதுகளுடைய இரு பெண் பிள்ளைகளும் தந்தையான 40 வயது நபருமே நஞ்சருந்திய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கணவன் மனைவிக்கிடையே நீண்ட நாள்களாகக் குடும்பப் பிரச்சினை இருந்து வந்ததாகவும் சம்பவதினம் மனைவி வீட்டிலிருந்து வெளியேறி இருந்தார் எனவும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், சம்பவதினம் இரவு 10 மணியளவில் வீட்டுக்கு வந்த குறித்த நபர் தனது மூன்று பிள்ளைகளுக்கும் தெரியாமல் இனிப்பு குளிர்பானத்தில் நஞ்சைக் கலந்து குடிக்குமாறு கூறிவிட்டு தான் தனது அறைக்குச் சென்று மதுபானத்துடன் நஞ்சை கலந்து அருந்தியுள்ளார் எனத் தெரியவருகிறது.

இந்நிலையில் தனது தந்தையும் தம்பியும் தங்கையும் தொடர்ந்து வாந்தியெடுத்துக்கொண்டிருந்ததை அவதானித்த 13 வது சிறுமி இது தொடர்பில் அயலில் வசித்த தனது பெரியப்பாவிடம் (தந்தையின் அண்ணன்) தெரிவித்ததையடுத்து பிரதேச வாசிகளுடன் இணைந்து நால்வரையும் கம்பளை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

பிள்ளைகளுக்கு நஞ்சை அருந்த கொடுப்பதற்கு முன்னர் முன்பு எடுத்த பழைய புகைப்படங்களை குறித்த நபர் வெகு நேரமாகப் பார்த்து கொண்டிருந்ததாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

மேலும் கடந்த ஜனவரி மாதமும் புஸ்சல்லாவ பெரட்டாசி தோட்ட மேமலை பிரிவிலும் குடும்ப பிரச்சினை காரணமாகத் தந்தை ஒருவர் தனது 12 மற்றும் 16 வயது பிள்ளைகளுக்கு நஞ்சை அருந்தக் கொடுத்துவிட்டு தானும் நஞ்சருந்திய நிலையில் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவ குழுவை உருவாக்க அரசு நடவடிக்கை

அரச நிதி, கடன் மற்றும் சென்மதி நிலுவைகள் பிரச்சினைகளால் நிதித்துறைக்கு ஏற்படுகின்ற தாக்கத்தின் அடிப்படையில் நிதிநெருக்கடி ஏற்படுவதை தடுத்தல் மற்றும் அவ்வாறான நிதி நெருக்கடிகள் ஏற்படின் அதன் செலவுகளைக் குறைத்தல் மிகவும் முக்கியமாகும்.

அதற்கமைய, தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு ஆக்கபூர்வமான நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் காலத்தோடு தழுவிய தீர்மானங்களை எடுத்தல் அவசியமாகும்.

அதனால், இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சுக்கும் இடையில் நிதித்துறை நெருக்கடிக்கான தயார்ப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாகவும், அவரவர் வகிபாகங்கள் தொடர்பாகவும் ஒருங்கிணைப்பை மேற்கொள்வதற்காக, நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழு மற்றும் நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவம் தொடர்பான தொழிநுட்பக் குழுவை ஸ்தாபிப்பதற்கும், வங்கிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு தேவையான ஏற்பாடுகளை உட்சேர்ப்பதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# பொரளை சிறிசுமண தேரரை கைது செய்யப் பிடியாணை!

திகோ குழுமத்தின் உரிமையாளர் திலினி பிரியமாலியுடன் இணைந்து பண மோசடிக்கு உதவினார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பிணையில் உள்ள பொரளை சிறிசுமண தேரரைக் கைது செய்து ஆஜர்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே நேற்று (புதன்கிழமை) பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜராகாத காரணத்தால் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய திலினி பிரியமாலி, ஜானகி சிறிவர்தன உள்ளிட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலையாகினர்.

# எம்.பிக்களின் வீடுகளை எரித்தவர்களை சுட்டு விரட்டுமாறு உத்தரவிட்ட கோட்டா

## இராணுவம் செவிசாய்க்கவில்லை என்று குற்றம் சாட்டுகின்றார் எஸ்.பி.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளின் எரியூட்டியவர்களை விரட்டுமாறும் - அவர்களைச் சுடுமாறும் கோட்டாபய ராஜபக்ஷ இராணுவத்துக்கு உத்தரவிட்டார். ஆனால், இராணுவ அதிகாரிகள் அந்த உத்தரவை ஏற்கவில்லை. இது தொடர்பில் நான் அறிந்த எல்லாவற்றையும் வெளியே சொல்லமாட்டேன்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றில், - எம்.பிக்களின் வீடுகளை எரித்தவர்கள் யார் அமரக்கீர்த்தி அத்துகோரல எம்.பியைக் கொன்றவர்கள் யார்? - என்று கேட்கப்பட்ட கேள்விகளுக்கு எஸ்.பி. திஸாநாயக்க எம்.பி. பதிலளிக்கையில்,

இரண்டையும் செய்தவர்கள் ஜே.வி.பியினர் தான்.நான் மட்டுமல்ல எல்லோரும் அவர்களைத் தான் சொல்கின்றார்கள். அவ்வாறு அட்டகாசம் புரிந்தவர்கள் பலர் ஜே.வி.பியின் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றார்கள்.

அதுமட்டுமல்ல காலிமுகத்திடல் போராட்டத்தில் விடுதலைப்புலிகளும் கலந்துகொண்டனர். புலிகள் இன்னும் செயற்படுகின்றார்கள். மேலும், அடிப்படைவாத முஸ்லிம்களும் அங்கு இருந்தனர்.

கோட்டாபய ராஜபக்ஷவால் அவர்களை விரட்ட முடியாமல் போனது. 200 பேர் அளவில்தான் இருக்கின்றார்கள். அவர்களை விரட்டத் தேவை இல்லை என்று கோட்டாபய நினைத்தார். ஆனால், இறுதியில் நிலைமை மோசமானது.

கடந்த மே 9 ஆம் திகதி இரவு எம்.பிக்களின் வீடுகளின் எரியூட்டியவர்களை விரட்டுமாறும் - அவர்களைச் சுடுமாறும் கோட்டாபய இராணுவத்துக்கு உத்தரவிட்டார். ஒரு பைத்தியக்காரன்போல் எல்லாப் பக்கமும் தொலைபேசி அழைப்பு எடுத்து அவர் உத்தரவிட்டார். ஆனால், இராணுவ அதிகாரிகள் அந்த உத்தரவை ஏற்கவில்லை. இது தொடர்பில் நான் அறிந்த எல்லாவற்றையும் வெளியே சொல்லமாட்டேன்.

இறுதியாக கோட்டாபயவுக்கு ஆலோசனை வழங்கியவர்கள் யார்? அவரை வந்து சந்தித்த வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் யார்? அவரைப் பதவியை விட்டு ஓடுமாறு கூறியவர்கள் யார்? இதற்குப் பின்னால் உள்ள சதி என்ன? எல்லாம்



எனக்குத் தெரியும். ஆனால், நான் எல்லாவற்றையும் சொல்லமாட்டேன்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க சரியான முடிவை எடுத்தார். ஜனாதிபதியாகி மறுகணமே காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை விரட்டியடித்தார். அவர்தான் சரியான முடிவை எடுத்தார்.

ரணில் சரியான பாதையில் அரசைக் கொண்டு செல்கின்றார். அவரை நாம் ஜனாதிபதியாக நியமித்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். அவர் சீனாவுடனும் உறவைப் பேணுகின்றார். இந்தியாவுடனும் உறவைப் பேணுகின்றார். அதேபோல், ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட அனைத்து நாடுகளையும் நட்பு வளையத்துக்குள் வைத்துள்ளார். - என்றார்.

# பண்டிகைக் காலத்திலாவது முட்டை விலை குறையுமா?

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் முட்டையின் விலை 50 முதல் 55 கிராம் அளவாக காணப்படும் போது இந்தியாவில் இருந்து 35 முதல் 40 கிராம் நிறையுடைய முட்டையை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

பண்டிகை காலத்தில் முட்டையின் விலையை குறைக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதா என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துார இந்துனில் முன்வைத்த கேள்விக்கு வர்த்தகத்துறை அமைச்சர் நளின் பர்னாந்து பதிலளிக்கவில்லை.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

இறைச்சி, மீன், கருவாடு ஆகியவற்றின் விலை சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் நடுத்தர மக்கள் முட்டையை அதிகமாகக் கொள்வனவு செய்தார்கள். சந்தையில் நிலவும் முட்டைக்கான தட்டுப்பாடு மற்றும் முட்டை விலை அதிகரிப்பு ஆகிய காரணிகளால் நடுத்தர மக்கள் தற்போது முட்டை கொள்வனவையும் இடைநிறுத்தியுள்ளார்கள்.

முட்டை தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இலங்கையில் உற்பத்தி செய்யும் முட்டையின் நிறை 50 முதல் 55 சதவீதமாக காணப்படும் பட்சத்தில் இந்தியாவில் இருந்து 35 முதல் 40 வரையான கிராம் நிறையுடைய முட்டையை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் முட்டை பண்டிகை காலத்தில் குறைவான விலைக்கு விநியோகிக்கப்படுமா என்பது தொடர்பில் வர்த்தகத்துறை அமைச்சர் அறிவிக்க வேண்டும்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டை ஊடாக அரச நிதியை மோசடி செய்யும் நிலை காணப்படுகிறது. அத்தியாவசிய பொருள்களின் விலையைக் குறைக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. – என்றார்.

# பெண்கள் உரிமைகளை வென்றெடுக்க ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் துறையில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைந்தது 20 தொடக்கம் 25 சதவீதமாக உள்ளது. ஆனால் நாம் அந்த மட்டத்தை அடையவில்லை.

எங்கள் நிர்வாகத் துறையில் பெண்கள் முன்னிலைக்குவந்துள்ளனர். கல்வித்துறையிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்துள்ளது. ஆனால் வணிகத் துறை போன்ற பல துறைகளில் அவர்களின் பங்களிப்பு அதிகரிக்கப்படவேண்டியதாக உள்ளது.

இந்நிலையை மாற்றியமைக்கும் வகையில் மகளிர் விவகார அமைச்சுடன் இணைந்து கொள்கை அறிக்கை தயாரிப்பதற்காக 2 குழுக்கள் நியமிக்கப்பட்டன. இந்த இரண்டு குழுக்களின் அறிக்கைகளையும் அமைச்சரவை அங்கீகரித்து என்னிடம் வழங்கியுள்ளது.

2023 முதல் 2033 வரை செயற்படுத்துவதற்காக பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்கான தேசியக் கொள்கை மற்றும் பெண்கள் அமைதி மற்றும் பாதுகாப்புக்கான தேசியக் கொள்கை ஆகிய இரண்டும் தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது குறித்து விரிவாக ஆராய்ந்து, இதில் சேர்க்கப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து யோசனைகளைப் பெறுவோம்.

மகளிர் அமைப்புகளுடன் கலந்துரையாடி எமது வேண்டுகோளின் அடிப்படையில் 3 வரைவுகள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று பாலினம் மற்றும் சமத்துவ சட்டம், மற்றொன்று பெண்களை வலுவூட்டும் சட்டம் மற்றும் தேசிய ஆணைக்குழு. இவை குறித்து இந்த மாதத்திற்குள் ஆராயப்படும். குறைந்தபட்சம் ஜூன் மற்றும் ஜூலைக்குள் இவை சட்டமாக்க வேண்டும்.

இது தவிர அரசாங்கத்துடன் தொடர்பில்லாத மக்கள் சபைகள் தொடர்பான சட்டமூலத்தையும் கரு ஜயசூரிய தயாரித்து வருகின்றார். அவருடன் கலந்துரையாடி அதில் பெண்களின் பிரதிநிதித்துவம் மற்றும் பெண்களின் உரிமைகளை உள்ளடக்குமாறு நாடாளுமன்றத்தில் உள்ள மகளிர் குழுவிற்கும் அமைச்சிற்கும் பரிந்துரைத்துள்ளேன்.

பெண்கள் மற்றும் பாலினத்திற்கான ஒரு நிறுவனத்தையும் உருவாக்க எதிர்பார்த்துள்ளோம். இதன் ஊடாக பெண்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த வாய்ப்பு ஏற்படும். பெண்களுக்காக இந்தப் பணியைச் செய்ய எதிர்பார்க்கிறேன். இது எங்கள் கொள்கையின் ஒரு பகுதியாகும்.

பெண்களின் உரிமைகள் குறித்து ஆராய்வதற்காக பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகளைக் கொண்டு பெரும் மாநாடொன்று நடத்த எதிர்பார்க்கப்படுகிறது. அந்தத் துறைகள் என்ன என்பது குறித்து எமது பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பு மற்றும் அமைச்சின் செயலாளருடனும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்து தீர்மானிப்போம்.

500 - 1000 பேர் கொண்ட குழு அங்கு கூடும் என்று நினைக்கிறேன். அவர்களுடன் இது குறித்து ஆராயவேண்டும். இன்று நாடளாவிய ரீதியிலும் மகளிர் விவகார அமைச்சிலும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. அரசியல் காரணமாக சிலவற்றில் போட்டி ஏற்பட்டுள்ளது.

பெண்களின் உரிமைக்காகவும் அதைச் செயல்படுத்தவும் அனைவரும் ஒன்றுபட வேண்டும். அந்த மேம்பாட்டுத் திட்டங்களுக்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொள்ளும். அதுதான் எங்களின் புதிய திட்டம். ஒன்றை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாங்கள் அமெரிக்காவிலோ ஐரோப்பாவிலோ வாழவில்லை. நாங்கள் ஆசியாவில் இருக்கிறோம். ஆசியா வில் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டது கிடையாது.

முழு ஆசியாவைமையமாகக்கொண்டுபார்த்தால், கொரியா, பிலிப்பைன்ஸ் மற்றும் மியான்மார் ஆகிய நாடுகளில் பெண் தலைவர்கள் இருந்தனர். எனினும் தெற்காசியாவிலிருந்தே பலர் வந்துள்ளனர்.

குறிப்பாக பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இலங்கையிலிருந்து வந்துள்ளனர். சோனியா காந்தி உட்பட ஏழு பேர் உள்ளனர். அதற்காக இந்தப் பிராந்தியங்களில் பெண்களுக்குக் கிடைத்துள்ள உரிமைகள் குறித்து நாம் திருப்தியடைய முடியாது.

ஆப்கானிஸ்தானில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அங்கு பெண்கள் கல்வி கற்க முடியாது, வேலைக்குச் செல்ல முடியாது. அவர்களின் உரிமைகளை அனுபவிக்க முடியாது. இந்தச் சூழலில், தெற்காசியா, குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைத்தீவு மற்றும் இலங்கை என்ற வகையில் இதைப் பற்றி ஆராய்வோம்.

ஏனெனில் சார்க் அமைப்பில் பெண்களின் உரிமைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இந்த உரிமைகளை எவ்வாறு பெறுவது என்பது தொடர்பில் நாம் இணைந்து கலந்துரையாடி, மகளிர் விவகார அமைச்சும் வெளிவிவகார அமைச்சும் இணைந்து இந்த வருடத்தில் இந்த நாடுகளின் பிரதான பெண் செயற்பாட்டாளர்களின் கூட்டத்தை இலங்கையில் நடத்த தீர்மானித்துள்ளன.

இலங்கையை மாத்திரம் முன்னோக்கி கொண்டு செல்வது வெற்றியளிக்காது. இப்பிராந்தியத்தியம் முழுவதும் இதனை செயல்படுத்தவேண்டும். அந்த வழியைப் பின்பற்றும்படி ஏனையவர்களையும் கேட்டுக்கொள்வதோடு நாங்கள் அந்த செயல்முறையில் முன்னணியில் இருப்போம்.

பெண்களின் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதோடு ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளைப்போல பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுப்போம். இந்நாட்டு மக்கள் தொகையில் பெரும்பான்மையானவர்கள் பெண்கள். அந்த மக்கள் அனைவரின் உரிமைகளையும் நாம் பாதுகாக்கவேண்டும். இதை நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஆராய்ந்து முன்னோக்கிச் செல்வோம். - என்றார்.



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.03.202இல் வெளியிடப்பெற்றது.

# நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 06

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 24 புதன்கிழமை 08.03.2023 கதிர் 371

## ச.தொ.சவில் களவாடிய கான்ஸ்டபிள் சிக்கினார்


மடவளை பகுதியில் உள்ள சதொச கிளையில் ஆயிரத்து 900 ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றார் எனக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மெனிக்ஹின்ன பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 46 வயதான பொலிஸ் கான்ஸடபிளே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரான கான்ஸ்டபிள் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி மடவளையிலுள்ள, சதொச வர்த்தக நிலையத்துக்கு வந்து ஆயிரத்து 900 ரூபா பெறுமதியான 2

# தேர்தல் ஆணைக்குழுவின் முடிவை கடாசினார் ரணில்

## வாக்களிப்புக்கு இதுவல்ல நேரம் எனவும் தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இந்த மாதம் வழங்கப்படும். அதற்கமைய, நாட்டு மக்களின் பிரச்சினைக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நேரத்தில் தேர்தல் ஒன்றை நடத்துவதற்குப் பொருத்தமான சூழல் ஒன்று இல்லை.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 2

## இப்போது சுதந்திரமாக ஊருக்குச் செல்கிறோம்

### தேர்தலில் மொட்டு வெல்லும் என்று மார்தட்டுகின்றார் சந்திரசேன எம்.பி.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தற்போது கிராமங்களுக்குச் செல்ல முடிகின்றது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நிச்சயம் நாம் வெற்றி பெறுவோம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரிசை யுகத்தால் எமக்குக் கிராமங்களுக்கு செல்ல முடியாதிருந்தது. தற்போது வரிசை யுகம் இல்லை. உரப் பிரச்சினை இல்லை. சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கவுள்ளது. எனவே, நாடு நெருக்கடியில் இருந்து மீளும். இதனை விரும்பாத சிலரே அரசின் திட்டத்தைச் சீர்குலைக்க முற்படுகின்றனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடக்குமா? இல்லையா? என்பது தெரியாது. தேர்தல் நடந்தால் அதில் நிச்சயம் வெற்றி பெறுவோம் - என்றார்.

# பெண்களுக்கு எதிரான இணையவழி வன்முறையை நிறுத்த வலியுறுத்து

## வாகரையில் இன்று உலகப் பெண்கள் தின நிகழ்வு






(ந.குகதர்சன்)


'பெண்களுக்கெதிரான இணையவழி வன்முறையை நிறுத்து' என்ற தொனிப்பொருளில் உலகப் பெண்கள் தின நிகழ்வுகள் இன்று வாகரை கண்டலடி கடற்கரையில் நடைபெற்றன.

சமகாலத்தில் மிகத் துரித கதியில் அதிகரித்துவரும் பெண்களுக்கெதிரான இணையவழிக் குற்றங்கள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைப்பாடும் இடைவெளிகளும் பரிந்துரைகளும் என்ற தலைப்பில் மாவட்டத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட வன்முறை அடங்கிய மனு மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் ஒன்று கூடி இணைய வழி வன்முறை தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்து, இணைய வழி வன்முறையை நிறுத்து, இணையத்தின் ஊடாகப் பெண்களை மிரட்டாதே என்பன போன்ற வாசகங்களை தாங்கிய பதாதைகளை கையில் ஏந்தியபடி ஊர்வலமாகச் சென்றனர்.

கண்டலடி கடற்கரையில் தொடங்கப்பட்ட பேரணியானது சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் வரை 2

## நள்ளிரவு முதல் பாண் விலை 10 ரூபாவால் குறைக்கப்படும்



நாட்டில் பாணின் விலையைக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், 450 கிராம் (ஒரு இறாத்தல்) நிறையுடைய பாணின் விலையை 10 ரூபாவால் குறைக்கத் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பாண் தற்போது 180, 190 மற்றும் 200 ரூபா ஆகிய வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று நள்ளிரவு முதல் பாணின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு 170 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என்று யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் கா.பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

## இந்தியாவின் கடன் வசதியின் கால அளவை நீடிக்கப் பேச்சு

இந்தியாவின் ஒரு பில்லியன் டொலர்கள் கடன் வசதியை நீடிப்பதற்காக, பேச்சு நடத்தப்படுவதாக அரசின் இரு மூலங்கள் ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையிடத்தில் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்தியாவின் தற்போதைய கடன் வசதி, இம்மாதம் 17ஆம் திகதியுடன் காலாவதியாகவுள்ள நிலையிலேயே புதிய கடன் வசதிக்கான பேச்சு இந்தியாவுடன் தொடங்கியுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு 'அயல் நாட்டுக்கு 2

## கடன்மறுசீரமைப்பு விடயத்தில் அமெ, ஐரோப்பா பெருமகிழ்ச்சி

### இலங்கைக்கு வரவேற்பு

இலங்கைக்கு இருதரப்பு கடன் வழங்குநர்கள் மறுசீரமைப்புக்கான உத்தரவாதங்களைச் சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கியுள்ளமையை இட்டு அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் வரவேற்றுப் பெரு மகிழ்ச்சி வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கான அமெரிக்காவின் தூதுவர் ஜூலி சங் விடுத்துள்ள கீச்சகப் பதிவில், இரு தரப்பு கடன் வழங்குபவர்களில் பெரும்பாலோர் இலங்கைக்கு உறுதியான மற்றும் நம்பகமான நிதியளிப்பு உத்தரவாதங்களை வழங்குவதற்கும், 2

## 5 பேருக்கு தூக்கு



கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஐந்து பேருக்குக் கேகாலை மாகாண மேல் நீதிமன்றம் இன்று தூக்குத் தண்டனையை விதித்தது.

2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலை தொடர்பிலேயே இந்தத் தண்டனை இன்று வழங்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு ஜுலை 3 ஆம் திகதி கேகாலை, தெவலகம, கஹகல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற விருந்துபசாரத்தின் போது ஒருவரைத் தாக்கி கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டு, குறித்த ஐவருக்கும் எதிராகச் சுமத்தப்பட்டிருந்தது.

## கேகாலை சிறையில் கைதி சுட்டுக்கொலை

### தப்பியோட முயன்றார் என்கின்றனர் அதிகாரிகள்

கேகாலை சிறைச்சாலையில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற கைதி மீது சிறைச்சாலை அதிகாரிகளால் நடத்திய துப்பாக்கிப் சூட்டில் அவர் உயிரிழந்தார் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

கொல்லப்பட்ட கைதி சிறைச்சாலைப் பணிகளில் அதிகாலையிலேயே ஈடுபடுத்தப்பட்டிருந்தார். சிறைச்சாலையின் பகுதியொன்றில் காணப்பட்ட சுவரின் சிதைவுகளின் வழியாக அவர் தப்பிச் செல்ல முற்பட்டபோதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த கைதி குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மல்சிறிபுர பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய கைதியே உயிரிழந்தவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, 2

## தென்கொரியா பறக்கின்றார் மஹிந்த

### 10 நாட்களுக்கு பயணத் தடை நீக்கம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத் தடையை 10 நாட்களுக்கு கோட்டை நீதிவான் நீதிமன்றம் 2



## தபால் மூல வாக்களிப்பு 28 - 31 வரை



உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான 2

## பெற்றோல் வாராந்த அப்டேட் இனி செவ்வாய்க்கிழமைக்கு

பெற்றோலைப் பெற்றுக் கொள்வதற்கான கியூஆர் குறியீட்டை எதிர்வரும் காலத்தில் வாரந்தம் செவ்வாய் கிழமைகளில் மீள்நிரப்புவதற்கு 2

## ஆறு வயது சிறுமி இறப்பு தாயும் நண்பரும் கைது

### பொலிஸார் தீவிர விசாரணை

சிறுமி ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பாணந்துறை -மீ ஹிரண, பின்கெல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று மாலை 6 வயது சிறுமி சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார். இது தொடர்பில் ஹிரண பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தாய் மற்றும் தாயின் சட்ட ரீதியற்ற கணவருடன் வசித்து வந்த குறித்த சிறுமி பல நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார் எனவும், அவருக்கு மருத்துவ உதவி வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சிறுமி இதற்கு முன்னர் பல தடவைகள் தாயின் சட்ட ரீதியற்ற கணவரால் தாக்கப்பட்டுள்ளார் எனவும் விசாரணைகளில் தெரிய-வந்துள்ளது.

கேட்டல் மற்றும் பேச்சு குறைபாடுகளைக் கொண்ட இந்தச் சிறுமியின் உடலில் பல தழும்புகள் மற்றும் வீக்கங்கள் காணப்படுக்கின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இறப்பு தொடர்பாக சிறுமியின் தாயான 25 வயதான பெண்ணும், அவரது சட்ட ரீதியற்ற கணவர் எனக் கூறப்படும் 29 வயதுடைய ஆணும் கைது செய்யப்பட்டுள்ளனர்

உயிரிழந்த சிறுமியின் சடலம், உடற்கூறாய்வுக்காக களுபோவில - கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள அதேவேளை ஹிரண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பெண்களுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சென்று வாகரை பொது மைதானத்தில் நிறைவடைந்தது.

அங்கு பெண்களுக்கெதிரான வன்முறையை தடுத்தல் தொடர்பான நாடகம், கவிதை, ஆங்கில பேச்சு, நாட்டுக் கூத்து என்பன நடைபெற்றன.

மட்டக்களப்பு அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளர் சட்டத்தரணி திருமதி மயூரி ஜனனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டச் செயலர் அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா –முதன்மை அதிதியாகவும் சிறப்பு அதிதிகளாக கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் என்.தனஞ்சயன், மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ருக்ஷன் சி குரூஸ், வாகரை பிரதேச செயலாளர் க.அருணன் மற்றும் கல்குடா வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜெயவதனன் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

சிறப்புநிகழ்வாக மாவட்ச்செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா கௌரவிக்கப்பட்டார்.

”சைபர் கிரைம்’ குற்றங்களுக்கெதிரான நடைமுறைகள் மாவட்டரீதியில் குறைவாகவே உள்ளது. நீதி மன்றத்தை நாடியே நீதி பெறவேண்டியுள்ளது. பெண்களுக்கெதிரான இணையவழி ஊடக வன்முறைக்கெதிரான விழிப்புணர்வு நிகழ்வாக இதைப் பார்க்கிறேன்.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருக்கும் வேளையிலும் அவர்கள் இந்த சமூகத்தை உயர்த்திக்கொண்டே இருக்கின்றனர். தங்கள் நிலையை உயர்த்தும்போது பெண்கள் இன்னும் பல சவால்களை எதிர்கொள்கின்றார்கள்” என்று அவர் தனது உரையில் தெரிவித்தார்.

## தேர்தல் ஆணை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற ஆளும் தரப்புக் கூட்டத்திலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

ஏப்ரல் 25 ஆம் நாள் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுக் காலை தன்னிச்சையாக முடிவெடுத்துள்ள நிலையிலேயே நேற்று மாலை ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேரர்தல் ஒன்றை நடத்துவதால் பெரிய மாற்றம் ஒன்று வந்துவிடப்போவதில்லை.நாங்கள் ரூபாவை மேலும் வலுவடையச் செய்ய வேண்டியதே தற்போது முக்கிய விடயமாகும்.

இந்தநாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்குக் குறைந்தது 4 வருடங்களாகும் எனப் பலர் கூறினார்கள். ஆனால், 8 மாதங்களில் நெருக்கடியைத் தீர்க்க முடிந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இந்த மாதம் வழங்கப்படும். அதற்கமைய, எதிர்வரும் நாள்களில் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படும்; நிவாரணம் வழங்கப்படும்.

ஏனைய கட்சியினர் உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றுவதற்குத் தீவிரமாக முயற்சித்து வருகின்றனர். பந்து எங்கள் கைகளுக்குக் கிடைத்துள்ளது.அடித்துஆடத்தயாராகஇருங்கள் – என்று ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி மேலும் கூறினார்.

## ச.தொ.சவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொருட்களை எடுத்துக்கொண்டு பணம்

செலுத்தாமல் மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிச் சென்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சதொச வர்த்தக நிலையத்தின் பிரதி முகாமையாளர் சம்பவம் குறித்து வத்தேகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார் இந்தப் பொலிஸ் கான்ஸ்டபிளைக் கைது செய்துள்ளனர்.

## பெற்றோல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தீர்மானித்துள்ளதாக வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் விடுத்துள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் இந்த மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் செலவீனத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்கங்களில் ஒன்றாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வார இறுதி நாட்களில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம்ஆகியனதொடர்ச்சியாகச்செயற்படவேண்டி இருப்பதன் காரணத்தால் விநியோகச் செலவு அதிகரித்துக்காணப்படுவதாகவும், அதனைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், குறித்த குறியீட்டு முறைமைக்கு அமைவாக வாகனங்களுக்கு விநியோகிக்கப்படும் பெற்றோல் உள்ளிட்ட எரிபொருட்களின் அளவீடுகள் மாற்றப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## கடன் மறுசீரமை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் ஆதரவளித்துள்ளதோடு சர்வதேச நாணய நிதியத்தின் உதவிப் பொதியைப் பெறுவதற்கும் ஒப்புக்கொண்டதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடன் மறுசீரமைப்புக்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள செயற்பாடுகளை வரவேற்பதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கிச்சகப் பதிவில், இலங்கையானது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற மேலும் பல நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும், அத்துடன், பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக எதிர்காலத்திலும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியுள்ளது, அதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தனது ஒத்துழைப்புக்களை வழங்கும் என்று தெரிவித்துள்ளது

## இந்தியாவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னுரிமை’ என்ற கோட்பாட்டிற்கு அமைவாக இந்தியா உதவிகளை வழங்குவதற்குத் தீர்மானித்திருந்தது.

இந்நிலையில், இந்தியா இலங்கைக்கு ஒரு பில்லியன் டொலர்களை கடனாக வழங்குவதற்கு இணக்கம்வெளியிட்டிருந்தது. குறித்த இந்தியக்கடன்வசதியில் இலங்கையானது மூன்றில் இரண்டு பங்கு பெறுமதியை மட்டுமே முக்கியமான மருந்துகள் மற்றும் உணவுக்காக பயன்படுத்தியுள்ளது.

இந்நிலையில்தான் இந்தியாவின் ஒரு பில்லியன் டொலர்கள் கடன் வசதியில் எஞ்சியுள்ள நிதியைப் பயன்படுத்தும் முகமாக குறித்த கடன்வசதியை மேலும் சில மாதங்களுக்கு நீடிப்பதற்கு இலங்கை இந்தியாவுடன், பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றது.


இந்தப் பேச்சுக் குறித்த கடன்வசதியை எதிர்வரும் ஆறு முதல் 12 மாதங்களுக்கு பயன்படுத்தும் வகையில் நீடிக்கும் வகையில் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இலங்கைமத்தியவங்கியானது கடந்த மாதத்தில் கையிருப்பானது 4.5 சதவீதத்தினால் அதிகரித்து 2.2 பில்லியன் டொலர்களாக இருப்பதாக கடந்த செவ்வாய்க்கிழமையன்று அறிவித்துள்ளது.

அதேநேரம், இந்தியாவினால் வழங்கப்படும் பொருளாதார, நிதி மற்றும் மனிதாபிமான உதவிகளின் அடிப்படையில் கடந்த ஆண்டில் 3.5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிக பெறுமதி இலங்கைக்கு கையளிக்கப்பட்டுள்ளதோடு, அந்நியச்செலாவணி ஆதரவான 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் 1.5 பில்லியன் அமெரிக்கடொலருக்கும் அதிகமான மூன்று கடனுதவித்திட்டங்கள் ஆகியவற்றுக்கு இந்தியா ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளது.

# இலங்கையில் கடுமையான பாதுகாப்புச் சட்டங்கள் முடிவுக்குக்கொண்டுவர ஐ.நா. சபை வலியுறுத்து!

## மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் இடித்துரைப்பு




இலங்கையில் கடுமையான பாதுகாப்புச் சட்டங்களை முடிவுக்கு கொண்டு வருமாறு ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் பலவீனமான கடன் மற்றும் பொருளாதார நெருக்கடி, இலங்கையில் அடிப்படை பொருளாதார மற்றும் சமூக உரிமைகளுக்கான மக்களின் அணுகலை கடுமையாக கட்டுப்படுத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் நேற்று மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மீட்புக் கொள்கைகள் ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்ய வேண்டும், மேலும் சமூகப் பாதுகாப்புகள் மற்றும் பொருளாதார பின்னடைவுக்கான பிற விடயங்களில் முதலீடு செய்ய வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊழல், வெளிப்படைத்தன்மை மற்றும் நிர்வாகத்தில் பொறுப்புக்கூறல், அத்துடன் வேரூன்றிய தண்டனையின்மை போன்ற அடிப்படை பிரச்சினைகளையும் நிவர்த்திக்க வேண்டும்என்றும்அவர்வலியுறுத்தியுள்ளார்.

கடுமையான பாதுகாப்புச் சட்டங்களை நம்புவதும், குடியியல் சமூகம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் துன்புறுத்தல் மற்றும் கண்காணிப்பு ஆகியவை முடிவுக்கு வர வேண்டும் என்றும் டேர்க் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தென்கொரியா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்காலிகமாக நீக்கியுள்ளது. இன்று இந்த உத்தரவைப் பிறப்பித்த நீதிமன்றம், எதிர்வரும் ஏப்ரல் 20 முதல் 30 ஆம் திகதி வரையில், மஹிந்த ராஜபக்சவுக்கான வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்கியுள்ளது.

2022ஆம் ஆண்டு காலிமுகத்திடல் மைதானத்தில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர் கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோதே கோட்டை நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

மாநாடொன்றில் கலந்துகொள்வதற்காக தனது சேவைபெறுநரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தென்கொரியாவுக்குச் செல்ல வேண்டியிருப்பதால், வெளிநாட்டு பயணத் தடையை நீக்குமாறு அவரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கையைக் கருத்தில் கொண்ட கோட்டை நீதிவான் மஹிந்த ராஜபக்சவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடையை 10 நாட்களுக்கு நீக்கியுள்ளது.

## கேகாலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெல்லம்பிட்டியில் பாதாள உலகக்குழுவைச் சேர்ந்தவரெனக் கூறப்படும் ‘பருப்புவா’ என்று அறியப்பட்ட அசங்க என்பவரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவரது நெருங்கிய உறவினர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

## தபால்மூல.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தபால் மூல வாக்களிப்பை எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா இன்று ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தேர்தலுக்கான தபால் மூல வாக்குச்சீட்டுகள் அடங்கிய பாதுகாப்பு பொதிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடத்துவது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளூடாக வெளயிடுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.




# உண்மையைக் கண்டறியும் புதிய பொறிமுறை நாடளாவிய ரீதியில் கலந்துரையாடல் அவசியம்

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தல்

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் போன்ற உள்ளக நீதிப் பொறிமுறைகள் தற்போது அவசியமற்றவையாக மாறியிருப்பதுடன் அவை பாதிக்கப்பட்ட தரப்பினரின் நம்பிக்கையை இழந்திருக்கின்றன.

பொறுப்புக்கூறல் சார்ந்த பொறிமுறைகளை அரசு முழுமையாக அமுல்படுத்துவதுடன் உண்மையைக் கண்டறிவதற்கான புதிய பொறிமுறை, நாடளாவிய ரீதியிலான விரிவான கலந்துரையாடல்களின் அடிப்படையில் உருவாக்கப் படவேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் உபகட்டமைப்பான சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பில் மீளாய்வு செய்யும் மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவின் 137 ஆவது கூட்டத்தொடர் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி தொடங்கியது.

அதன்படி இலங்கை தொடர்பான மீளாய்வு இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது. மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த மீளாய்வுக்குழுவின் கூட்டத்தொடரை முன்னிறுத்தி மனித உரிமைகள் அமைப்புக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கை தொடர்பான தமது அறிக்கைகளைச் சமர்த்துள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவிடம் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

மன்னிப்புச்சபையின் அறிக்கையில் அமைதிப் போராட்டங்கள் மீதான அடக்குமுறைகள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பயன்பாடு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப் படாமை ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அவை தொடர்பாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு –

பொருளாதார நெருக்கடியின் விளைவாகக் கடந்த 2022 பெப்ரவரி மாதம் முதல் இலங்கை மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். அந்தப் போராட்டங்களை இராணுவ மயப் படுத்தப்பட்ட முறைமையின் ஊடாக அரசாங்கம் எவ்வாறு கையாண்டது என்பதையும், சில போராட்டங்களுக்கு எதிராக எவ்வாறு அநாவசியமானதும் மிகையானதுமான பாதுகாப்புப்படையினர் பயன்படுத்தப்பட்டனர் என்பதையும் நாம் ஆவணப்படுத்தியுள்ளோம்.

இருப்பினும் இந்தச் சம்பவங்களுக் குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் தற்போதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இந்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அமைதிப் போராட்டக்காரர்களைப் பாதுகாப்பதற்கும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைக்கு இடமளிப்பதற்கும் அதிகாரிகள் தவறியிருக்கின்றார்கள்.

கடந்த 2022 ஆம் ஆண்டு குறைந்தபட்சம் 3 சந்தர்ப்பங்களில் நாட்டில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டதுடன் உரியவாறான செயன்முறைகள் மற்றும் நீதிமன்ற மேற்பார்வையின்றி நபர்களைக் கைதுசெய்வதற்கும் தடுத்துவைப்பதற்குமான மட்டுமீறிய அதிகாரங்கள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன. அதன்படி அதிகாரிகளால் கடத்தல் பாணியிலான கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் 2022 ஓகஸ்ட் மாதம் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கிய இரு மாணவத ;தலைவர்களைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைப்பதற்கான உத்தரவு ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எவ்வித அடிப்படைகளும் அற்றவையாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் போராட்டங்கள்மீதான அடக்குமுறைகளை முடிவுக்குக்கொண்டு வருமாறும், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அடுத்ததாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாதொழிப்பதாக இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் உத்தரவாதமளித்திருப்பினும், அந்தச் சட்டம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

குறிப்பாக கடந்த 2022 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மேற்கொள்வதற்கான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டபோதிலும், 'பயங்கரவாதம்' என்பதற்கான உரிய வரைவிலக்கணம் இன்மை, நீண்டகால தடுப்புக்காவலில் வைக்கப்படல் உள்ளடங்கலாகப் பயங்கரவாதத்தடைச்சட்டத்தில் காணப்படும் முக்கிய குறைபாடுகள் அந்தத் திருத்தங்களின் ஊடாக நிவர்த்திசெய்யப்படவில்லை.

இந்நிலையில் பயங்கரவாதத்தடைச்சட்டம் தேசிய பாதுகாப்புச்சட்டத்தின் ஊடாகப் பதிலீடு செய்யப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது. அதன்படி பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக நீக்கும் அதேவேளை, புதிதாகக் கொண்டுவரப்படக்கூடிய எந்தவொரு சட்டமும் சர்வதேச சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு அமைவாகக் காணப்படுவதை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம்.

மூன்றாவதாக பிரகீத் எக்னெலிகொட வழக்கு, கடற்படையினரால் 11 பேர் கடத்தப்பட்ட வழக்கு, திருகோணமலை 5 மாணவர்கள் வழக்கு, ஜோசப் பரராஜசிங்கம் வழக்கு, லசந்த விக்ரமதுங்க வழக்கு உள்ளிட்ட முக்கிய மனித உரிமைகள் வழக்கு விசாரணைகள் முடக்கப்படுவது அல்லது தாமதிக்கப்படுவதானது குற்றவாளிகள் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு மேலோங்குவதற்கு வழி வகுக் கும். காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் போன்ற உள்ளக நீதிப்பொறிமு;றைகள் தற்போது அவசியமற்றவையாக மாறியிருப்பதுடன் அவை பாதிக்கப்பட்ட தரப்பினரின் நம்பிக்கையை இழந்திருக்கின்றன.

எனவே, பொறுப்புக்கூறல் சார்ந்த பொறிமுறைகளை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்தவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். அதேவேளை உண்மையைக் கண்டறியும் புதிய பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பது தொடர்பாக அரசாங்கம் அவதானம் செலுத்துமேயானால், அது நாடளாவிய ரீதியிலான கலந்துரையாடல்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்படவேண்டும் என்று மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

## நல்லுள்ளம்!

வீதியில் வீழ்ந்து கிடந்த 10 ஆயிரம் ரூபாய்பணத்தைஎடுத்து பத்திரமாக உரியவரிடம் ஒப்படைத்தார் ஆசிரியர் ஒருவர்.

பெரிய நீலாவணையை சேர்ந்த எஸ்.ஜெயகாந்தன் என்பவரின் ரூபாய் பத்தாயிரம் பணம் கல்முனை பிரதான வீதி ஹற்றன் நெஸனல் வங்கிக்கு அருகாமையில் செவ்வாய்க் கிழமை தொலைந்தது.

இந்த பணத்தை கண்டெடுத்த ஆசிரியரான நற்பிட்டிமுனையைச் சேர்ந்த எம்.எம்.நகீப் உரிமையாளரைக் கண்டுபிடித்து, அவர் கற்பிக்கும்பாடசாலையான கல்முனை அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தில்வைத்துபணத்தை பாடசாலை அதிபர் ஏ.எச். அலிஅக்பர் முன்னிலையில் ஒப்படைத்தார்.

இந்த மனி தாபிமான நடவடிக்கையை மேற்கொண்ட ஆசிரியருக்கு பணத்தை தொலைத்த எஸ்.ஜெயகாந்தன் உட்பட்ட பலர் நன்றி தெரிவித்தனர்.

---

### இந்திய – இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில்

# நாடாளுமன்றில் டக்ளஸ் மீது சீறிப் பாய்ந்த சாணக்கியன்

(அகீல்)



இந்திய – இலங்கை மீனவர்களுக்கிடையில் மோதலை உருவாக்கும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் செயற்பாடுகள் காணப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் செவ்வாய்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு அமைச்சரைச் சாடினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பொருளாதார ரீதியில் தன்னிச்சையாக முன்னேற்றமடையும் திறன் கொண்டவர்கள்.

இந்த ஆட்சியின் தவறான தீர்மானங்களினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணவிவசாயம், கால்நடை அபிவிருத்தி மற்றும் மீன்பிடி கைத்தொழில் ஆகியதுறைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எனக் கூறுவதற்கும் அருவருப்பாக இருக்கின்றது. இந்திய – இலங்கை மீனவர்களுக்கிடையில் மோதலை உருவாக்குவ–துதான் அவருடைய பொறுப்பாகக் காணப்படுகின்றது. அவர் இந்த ஆட்சியின் கைக்கூலியாக இருக்கின்றார்.

அவர் வட பகுதியிலுள்ள மீனவர்கள் குறித்து சிந்தித்துப் பார்க்காமல், இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் குழப்பத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளையே அவர் முன்னெடுக்கின்றார். இலங்கை தமிழர்கள் மீது அக்கறை கொண்டுள்ள தமிழக அரசியல்வாதிகளையும், தமிழக மக்களையும் எங்களுக்கு எதிரானவர்களாக மாற்றும் நோக்கிலேயே அவர் இந்த நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் இனிவரும் காலங்களில் இவ்வாறானவர்களை இனங்கண்டு விரட்டியடிக்க வேண்டும் – என்றார்.

இந்திய மீனவர்களின் நாட்டுப் படகுகளுக்கு இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்குவது தொடர்பான யோசனையை முன்வைப்பதற்கு வடக்கு மீனவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அத்தகைய ஒரு திட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தப்போவதாகவும் அறிவித்துள்ளனர்.

---

# கசிப்பை கட்டுப்படுத்த ஆளணி வசதி போதாது

## கிளிநொச்சி மதுவரித் திணைக்களம் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் கசிப்பு உள்ளிட்ட சட்டத்துக்குப் புறம்பான மது உற்பத்தி விற்பனையைக் கட்டுப்படுத்த போதிய ஆளனி வளம் தம்மிடம் இல்லை என்று மாவட்ட மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கசிப்பு உள்ளிட்ட சட்டவிரோத மதுபானங்களால் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது. இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து பொலிசாருக்கோ அல்லது மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கோ தகவல்களை வழங்கும்போதும் எந்தவித நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படுவதில்லை என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கிளிநொச்சி முட்கொம்பன் பகுதியில் இடம் பெறும் கசிப்பு உற்பத்தி விற்பனைகள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்களத்திற்குப் பல தடவைகள் தெரியப்படுத்தியும் இதுவரை எந்த வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லையென பிரதேச பெண்கள் அமைப்புக்கள் தெரிவித்தன.

இந்த விடயம் தொடர்பாக மேற்படி திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தங்களிடம் போதிய ஆளனிகள் இல்லை என்றும் அதன் காரணமாகவே தமது செயற்பாடுகளை உடனடியாக முன்னெடுக்க முடியாது இருப்பதாகவும் அவர்கள் மக்களிடம் தெரிவித்துள்ளனர்.

அலுவலகத்தில் தற்போது மதுவரி காவலர் பதவியில் உள்ள இரண்டு பேர் மட்டுமே கடமையில் உள்ளனர் எனவும் குறித்த அலுவலகத்துக்கு தேவையான மது வரி பரிசோதகர் மது வரி அலுவலக பொறுப்பதிகாரி மற்றும் பெண் உத்தியோகத்தர்கள் இல்லை என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறு குற்றச்செயல் நடைபெறும் இடத்துக்கு மதுவரி பரிசோதகர் ஒருவருடன் ஏனைய அதிகாரிகள் சென்று கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் மாவட்டத்தில் மது வரி பரிசோதகர் இல்லாத காரணத்தினால் குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை குறித்த வளாகத்தில் இயங்கும் வட மாகாண மதுவரித் திணைக்கள அலுவலகத்திலும் மது ஆணையாளர் மற்றும் மது அத்தியட்சகர் ஆகிய இருவர் மாத்திரமே கடமையில் உள்ளனர்.

மேற்படி அலுவலகத்திற்கு தேவை–யான ஆளனி வளங்கள் இதுவரை நிரப்பப்படாத நிலை காணப்படுகின்றது இதனாலேயே குறித்த பிரதேசங்களிலே இடம்பெறுகின்ற சட்டவிரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு இயலாமையில் இருப்பதாகவும் மேற்படி அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# சர்வதேச நாணய நிதிய உதவியுடன் இலங்கைக்கு பல கதவுகள் திறக்கும்

## பொருளாதார ஆய்வாளர் தனநாத் பெர்னாண்டோ மகிழ்ச்சி



சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதி மூலம் இலங்கைக்குப் பலகதவுகள்திறக்கப்படும் என பொருளாதார ஆய்வாளர் தனநாத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதியை எவ்வாறு பெறுவது என்பது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே பொருளாதார ஆய்வாளர் தனநாத் பெர்னாண்டோ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'இலங்கையுடனான இந்த ஒப்பந்தத்தில் நாங்கள் உடன்படுகிறோம் என அடுத்த முடிவாக சர்வதேச நாணய நிதியம் ஓர் அறி விப்பை வெளியிடும். அதன் பிறகு முதல் தவணை வெளியாகும்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதல் கட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து சுமார் 30 – 35 கோடி டொலர் பெறுவோம் என்று நினைக்கிறேன். சர்வதேச நாணய நிதியத்தின் பணம் வேறு எங்கும் செல்ல முடியாது. இலங்கை மத்திய வங்கியின் கையிருப்புகளுக்கு நேரடியாகச் செல்கிறது. அவர்களின் கையிருப்பு அதிகரிக்கும் போது, எங்கள் கடன்வகைப்பாடு அதிகரிக்கிறது.

அங்கிருந்து, நாம் பல கதவுகளைத் திறக்கலாம். அவை கடன் பணம் என்ற போதிலும் பணத்துடனான பல அலுமாரிகள் திறக்கப்படும். தற்போதைய சூழ்நிலையில் எங்களால் ஒரு ரூபா கடன் கூட வாங்க முடியாதென சூழலில் கிடைக்கும் இந்த பணம் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

மக்களுக்கும் கொஞ்சம் நிம்மதி கிடைக்கும். பொதுவாக டொலரின் விலை 300 ரூபாவுக்கு அருகில் வரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

# நாட்டை மீட்கும் இயலுமை மொட்டுக்கு மட்டுமே உண்டு

## சாகர காரியவசம் இப்போது இப்படிக் கருத்து

நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணக் கூடிய இயலுமை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமு–னவின் தலைமைத்துவத்துக்கு மாத்திரமே காணப்படுகிறது. இந்த விடயம் தொடர்பில் மக்கள் அறிவு பூர்வமாக சிந்தித்து செயற்பட வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள பொதுஜன பெரமுன தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்கக் கூடிய கட்சி எது என்பதை மக்கள் அறிவுடன் சிந்திக்க வேண்டிய காலம் இதுவாகும். இன்று நாட்டில் காணப்படும் பிரதான பிரச்சினை பொருளாதார பிரச்சினை என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியினர் தனவந்தர்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார வேலைத்திட்டங்களையே கொண்டுள்ளனர். அதே போன்று ஜே.வி.பி. மாக்சிஸ பொருளாதாரக் கொள்கையையே கொண்டுள்ளனர்.

இந்த இரண்டையும் சாராத நடுநிலைமையான பொருளாதாரக் கொள்கையே எமது நாட்டுக்கு பொறுத்தமானதாகும். அதற்கேற்ப சிறந்த பொருளாதாரக் கொள்கையுடன் நாட்டை நிர்வகிக்கக் கூடிய திறன் கொண்டவர்கள் பொதுஜன பெரமுனவிலேயே காணப்படுகின்றனர்.

ராஜபக் ஷ ஆட்சி காலத்தில் 30 வருட கால உள்நாட்டு யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது. கடுமையான யுத்த காலங்களிலும் கூட பொருளாதாரம் முறையாக நிர்வகிக்கப்பட்டது. எனவே தான் அதற்கான இயலுமை எமக்கு மாத்திரமே காணப்படுகிறது என்பதை உறுதியாகக் குறிப்பிடுகின்றோம். பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பொதுஜன பெரமுனவின் தவிசாளராக செயற்படுகின்றாரா இல்லையா என்பதை அவர் மாத்திரமே அறிவார். எனவே அது தொடர்பில் இனியும் நாம் கருத்துக்களை வெளியிட விரும்பவில்லை. அவர் மனசாட்சியின் பிரகாரம் சிந்தித்து செயற்பட வேண்டும். – என்றார்.

---

# பெண்கள் நினைத்தால் எதையுமே மாற்றலாம்

## செந்தில் தொண்டமானின் மகளிர் தின வாழ்த்து

இந்த நாட்டின் ஒவ்வொரு வளர்ச்சிக்கு முன்பும் பின்பும் பெண்கள் இருக்கிறார்கள். பன்முக திறமைகள் கொண்ட பெண்கள் இந்த சமுதாயத்தில் உருவாக்கிய மாற்றங்கள் அதிகம். பெண்களுக்கான சம உரிமை மற்றும் பொருளாதார சுதந்திரமே ஒரு சமூகத்தின் வெற்றியாகப் பார்க்கப்படுகிறது என்று தெரிவித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், அனைத்துத் துறைகளிலும் வெற்றி நடைபோடும் அனைத்து மகளிருக்கும் தன்னுடைய இனிய மகளிர் தின வாழ்த்துக்கள் எனத் தெரிவித்துள்ளார்.

பெண் என்பவர் இந்தத் தேசத்தைக் கட்டியமைக்கும் வலிமை கொண்டவள். ஒரு குடும்பத்தை முன்னேற்றவும் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதிலும் பெண்களின் பங்கு என்பது அளப்பறியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ள அவர் –

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடப்படுமிடத்து, பெண்களுக்கான வாய்ப்புகள் அதிகளவில் வழங்கப் படும் இடத்தில் இலங்கை காணப் படுகிறது என்றும் அதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இலங்கையில் துணிச்சலுடன் பெண்கள் வேலைக்கு சென்ற முதல் சமுதாயம் மலையகமே.

மலையகப் பெண்களின் கடினமான செயற்பாட்டால் நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்பப் பட்டது. நாட்டுக்கே முன் உதாரணமாக செயற்பட்டவர்கள் மலையகப் பெண்களே. அதேபோல் உலகின் முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா என்பதாகும். எனவே, அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். அனைத்துத் துறைகளிலும் சம அந்தஸ்து பெண்களுக்கு வழங் கப்பட வேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியப் பங்குதாரர்களாக பெருந்தோட்டப் பெண்கள் உள்ளனர் என்பதை எவரும் மறுக்க முடியாது. பெண்கள் நினைத்தால் இந்த சமூகத்தில் எத்தகைய மாற்றத்தையும் கொண்டுவர முடியும். அத்தகைய மாற்றத்தின் தொடக்கமாக நம்மு–டைய இல்லங்கள் அமையட்டும்.

பெண்களை மதித்துக் கொண்டாடுவதுடன் அவர்களின் கரங்களை வலுப்படுத்துவதையும் நாம் அனைவரும் நம்முடைய வீடுகளிலிருந்து தொடங்குவோம் என தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ரணிலின் நிலைப்பாடு

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2022 நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை முழுமையாக நிராகரிப்பதாக இலங்கை மீண்டும் அறிவித்துள்ளது.**

**“ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஆணையர் அலுவலகத்தால் இலங்கை தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள ஆதாரங்களைத் திரட்டும் வெளியகப் பொறிமுறையை மேலும் விரிவுபடுத்தி – வலுப்படுத்துகின்ற 51/1 தீர்மானத்தை ஏற்கனவே கடந்த ஒக்ரோபர் மாதம் இலங்கை வெளிவிவகார அமைச்சர் கூறியமை போன்று நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம். இந்தத் தீர்மானங்கள் எமது நாட்டு மக்களுக்கு எவ்வகையிலும் உதவவில்லை என்பதுடன் இலங்கைச் சமூகம் துருவமயப்படுத்தப்படுவதற்கு வழிவகுப்பதாக அமைந்துள்ளது. அதுமாத்திரமன்றி, இவை இலங்கையில் நல்லிணக்கத்தை மேம்படுத்தல் என்ற இலக்கைப் பூர்த்திசெய்யும் வகையில் அமையவில்லை. எனவே இது வேறு பயனுள்ள விடயங்களுக்காகப் பயன்படுத்தப்படக்கூடிய ஐ.நா. உறுப்பு நாடுகளின் நிதியை வீணடிக்கின்ற செயற்திறனற்ற நடவடிக்கை என்பதே எமது நிலைப்பாடாகும்.”**

**இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52 ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.**

**2015ஆம் ஆண்டி மைத்திரி – ரணில் கூட்டு அரசு ஆட்சிக்கு வந்தபோது– ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இலங்கையும் சேர்ந்து இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றியது. ஆனால், 2019இல் கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தபோது இந்த நிலைப்பாட்டில் தலைகீழ் மாற்றம் வந்தது. தீர்மானங்களில் இருந்து ஒரு தலைப்பட்சமாக விலகுவதாக இலங்கை அறிவித்தது.**

**அது முதல் ஒவ்வொரு தடவையும் இதே நிலைப்பாட்டையே இலங்கை தொடர்கின்றது. 2015ஆம் ஆண்டு ஐ.நா. தீர்மானத்தை இலங்கை அரசு ஆதரித்தபோது– ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சர் (பிரதமர்) ஐ.நா. தீர்மானத்தை இப்போது மறுக்கும்போது– ரணில் அரச தலைவர் (ஜனாதிபதி). 2019இல் இலங்கை ஒருதலைப்பட்சமாக ஐ.நா. தீர்மானத்திலிருந்து வெளியேறும்போது கோட்டாபய ராஜபக்சவே நாட்டின் அரச தலைவர். அவரது கொள்கையையே ஐ.நா.வில் கொழும்பு தொடர்கின்றது என்று சொல்வதற்கில்லை. ரணில் அரச தலைவரான பின்பும் அந்தக் கொள்கையில் மாற்றம் ஏற்படவில்லை என்பதற்குக் காரணம் ரணிலும் அதே கொள்கையில் இருக்கின்றார் என்பதுதான்.**

**2015இல்ஐ.நா.தீர்மானத்தின்மூலம்பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத் தொடுநர்களையும் உள்ளடக்கிய ஒரு விசாரணைப் பொறிமுறையை (இது கலப்புப் பொறிமுறை என்று வழக்கத்தில் சொல்லப்பட்டது) உருவாக்க இணங்கிய ரணில், பதவியில் இருந்து அகல்கின்ற 2019 காலப் பகுதியில் அத்தகைய ஒரு பொறிமுறை, போர்க் குற்ற விசாரணை எல்லாம் இலங்கை போன்ற நாட்டுக்கு ஒத்துவராது என்று வெளிப்படையாகவே கருத்துத் தெரிவித்தவர். எனவே இன்றைய ஆட்சி ஐ.நாவில் எடுத்திருக்கும் நிலைப்பாடு என்பது கோட்டாபயவின் தொடர்ச்சி மட்டுமல்ல ரணிலின் நிலைப்பாடும் கூடத்தான்.**

# பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டோருக்கு சலுகை

## மத்திய வங்கி அறிவிப்பு

இலங்கையில் பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்காக விசேட சலுகை வழிமுறைகள் தொடர்பில் மத்திய வங்கி அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகளால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்குமான சலுகை வழிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட கடன் பெறுநர்களுக்காக நீடிக்கப்பட்ட மீள்கொடுப்பனவுக் காலங்கள், சலுகை வட்டி வீதங்கள், தொழில்படு மூலதனக் கடன்கள், படுகடனை காலந்தாழ்த்திச் செலுத்தும் வசதி மற்றும் கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல், மீள அட்டவணைப்படுத்தல் போன்றவற்றை இந்த திட்டங்கள் உள்ளடக்கியுள்ளன.

இந்த சலுகைகள், சுற்றுலாத் துறை, ஆடை, பெருந்தோட்டம், தகவல் தொழிநுட்பம், ஏற்பாட்டுச்சேவை வழங்குநர்கள், போக்குவரத்து, பாடசாலை வான் சேவை வழங்குநர்கள், பார ஊர்திகள், சிறிய பொருள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் பஸ்கள் அத்துடன் தனியார் துறை ஊழியர்கள் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட துறைகளின் பல சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு உதவியளிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண்களை இலக்கு வைத்து நாட்டில் சைபர் துன்புறுத்தல்

## பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவலை

இலங்கையில் பெண்களுக்கு எதிரான சைபர் துன்புறுத்தல்கள் அதிகரிப்பது தொடர்பாக கரிசனை வெளியாகியுள்ளது.

பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு பெண்களுக்கு எதிரான சைபர் துன்புறுத்தல்கள் அதிகரிப்பது தொடர்பாகக் கவலை வெளியிட்டுள்ளது.

டிஜிற்றல் தளங்களில் பாலின வன்முறைகளைக் கையாள்வதற்கு பயனுள்ள மற்றும் திறமையான முறைப்பாட்டு பொறிமுறைகள் அவசியம் எனத் தெரிவித்துள்ள பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு டிஜிற்றலை மையமாகக் கொண்ட பாலின வன்முறை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டியது அவசியம் எனவும் தெரிவித்துள்ளது.

டிஜிற்றல் தளங்களை எவ்வாறு பாதுகாப்பாகப் பயன்படுத்துவது என பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் எனவும் பெண் பாராளு மன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் உலகமயமாக்கல் காரணமாக பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மாற்றமடைந்துள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்ணான்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

சர்வதேச பெருந்தொற்று மற்றும் நடமாட்டத்தின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக உலகில் வாழ்க்கை பாரிய விதத்தில் மாற்றமடைந்தது, தொழில்கள் கல்வி மற்றும் சமூக செயற்பாடுகள் மாற்றமடைந்தன எனவும் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழில்கள் கல்வி மற்றும் சமூக செயற்பாடுகள் ஒன்லைன் டிஜிற்றல் உலகிற்கு மாற்றப்பட்டுள்ளன பெருந்தொற்றுக்குப் பின்னைய பல சமூகங்களில் இணைய வழி கல்வி மற்றும் வீட்டிலிருந்து பணிபுரிதல் என்பது இலங்கை உட்பட பல நாடுகளில் சாதாரணமான விடயங்களாக மாறியுள்ளன என தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இதன் காரணமாக டிஜிற்றல் வெளியை மற்றும் சாதனங் களை பயன்படுத்துவது பல மடங்காக அதிகரித்துள்ளது குறிப்பாக சிறுவர்கள் மத்தியில் இது பல மடங்கு அதிகரித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் குடும்பத்தால் ஒரு டிஜிற்றல் சாதனத்தை மாத்திரம் கொள்வனவு செய்யக்கூடிய அல்லது வைத்திருக்கக் கூடிய நிலை காணப்பட்டால் பெண்பிள்ளையை விட ஆண் பிள்ளைக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது எனத் தெரிவித்துள்ள இலங்கையின் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு பாரபட்ச நம்பிக்கைகளே இதற்குக் காரணம் எனவும் தெரிவித்துள்ளது.

பெண்கள் டிஜிற்றல் சாதனங்களை வலையமைப்பு மற்றும் டேட்டாவை பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் மட் டுப்பாடுகள் காரணமாக சர்வதேச அளவில் பெண்கள் மத்தியில் டிஜிற்றல் கல்வியறிவு குறைவாக காணப்படுகின்றது என தெரிவிக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அழுத்தங்களுக்கு உள்ளானவர்கள் பெருந்தொற்றுக்குப் பின்னர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் கணினி அவசர தயார் நிலை குழு ஆகியவற்றுக்கு அதிகளவு முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர் எனவும் இலங்கையின் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தெரிவித்துள்ளது.

இதில் பாதிக்கப்பட்டவர்கள் அநேகமாக பெண்களும் சிறுவர்களுமே எனவும் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தெரிவித்துள்ளது.

## பேரீச்சம்பழ இறக்குமதி வரி ஒரு ரூபாவாகக் குறைப்பு

பேரீச்சம்பழ இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த விசேட வரியை கிலோகிராம் ஒன்றுக்கு 200 ரூபாவிலிருந்து 1 ரூபாவாக குறைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

முஸ்லிம்களின் நோன்பு காலத்தை முன்னிட்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகள், நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகள், நலன் விரும்பிகள் ஆகியோரிடம் இருந்து அன்பளிப்பாகவோ நன்கொடையாகவோ பெறுவதற்கு வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த காலப் பகுதிக்கே இந்த வரி விலக்கு பொருந்தும் எனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

## கண்டி பொலிஸ் வலயத்தில் கடந்த மாதம்

# போதைப்பொருள் தொடர்பாக மொத்தம் 1,845 வழக்குகள்

### மத்திய பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் தகவல்



கடந்த மாதம் கண்டி பொலிஸ் வலயத்தில் போதைப்பொருள் தொடர்பாக மொத்தம் 1845 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என மத்திய பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

கண்டி செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் பாதுகாப்பு தொடர்பாக அவர் கருத்து வெளியிடும் போதே இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷ தலைமை யில் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

கடந்த மாதத்தில் மட்டும் கண்டி மாவட்டத்தில் ஹெரோயின் தொடர்பான 564 வழக்குகளும், ஐஸ் போதைப்பொருள் தொடர்பாக 142 வழக்குகளும் , கஞ்சா போதைப்பொருள் தொடர்பாக 1139 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன எனவும் மத்திய பிராந்திய பிரதி பொலீஸ்மா அதிபர் மஹிந்த திசாநாயக்கா மேலும் தெரிவித்தார்.

போதைப் பாவனையைக் கட்டுப்படுத்த தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் இதற்காக கண்டி மாவட்டத்தில் மட்டும் 287 பாடசாலைகள் அவதானிக்கப்பட்டு அவர்கள் அறிவுறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவித்தார். இந்தச் செயற்பாடு தொடர்ந்தும் நடைபெறும் என்றும் குறிப்பிட்டார்.

# வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சுகாதாரத் தொழிற் சங்க பணிப்புறக்கணிப்பு





சுகாதாரத் தொழிற்சங்கத்தின் ஒருநாள் அடையாள பணிபகஷ்கரிப்பு வவுனியாவில் இன்று (புதன்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் இரத்து செய்யப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாக கொண்டு நாடளாவிய ரீதியில் குறித்த அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு வவுனியாவிலும் ஆதரவு வழங்கப்பட்டதுடன், தொழிற்சங்கத்தினை சார்ந்த உறுப்பினர்கள் சுகவீன விடுப்பை பெற்று பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் வவுனியா பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவுகளை தவிர்ந்த ஏனைய சேவைகளில் தொய்வு நிலை ஏற்பட்டிருந்தது.

வைத்தியர்கள் மற்றும் தாதியர் தொழிற்சங்கங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து சுகாதாரத் தொழிற்சங்கங்களாலும் முன்னெடுக்கப்பட்டுவரும் குறித்த போராட்டம் இன்று புதன்கிழமை காலை 6.30 முதல் நாளை காலை 6.30 வரையான காலப்பகுதிவரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போர்ப் பாதிப்பில் பெண்களுக்கே முதலிடம் ஆனால் பேச்சில் அவர்களுக்கு இடமில்லை

## ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது

போர்கள் மற்றும் மோதல்களில் முதன்மையாகப் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே, ஆனால் இராஜதந்திரப் பேச்சுக்களில் அவர்களின் பங்களிப்பு மிகமிகக் குறைவாகவே உள்ளது என்று ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

மார்ச் 8 ஆம் நாள் உலக மகளிர் தினத்தைமுன்னிட்டுநடந்தநிகழ்வில்ஐ.நா. பெண்களின் நிர்வேற்று இயக்குநர் சிமா பஹோஸ் இந்தக் கருத்தை வலியுறுத்தினார். உலகெங்கிலும் உள்ள பெண்களின் வாழ்க்கை, ஆரோக்கியம் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்க இந்த உலகம் செய்ய வேண்டியது இன்னும் அதிகமுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பேச்சு மேசைகளின் அமைப்பிலும் (ஒருங்கிணைப்பில்) பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராகக் குற்றமிழைப்பவர்ளைத் தப்பிக்கவிடும் முறையிலும் நாம் கணிசமான மாற்றத்தைச் செய்ய வேண்டியிருக்கிறது என்று பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த ஐ.நா பாதுகாப்பு சபை விவாதத்தில் பஹூஸ் கூறினார்.

ஆப்கானிஸ்தானில் நடந்துவருவது "பால்நிலைத் தீண்டாமை" என்றார் பஹூஸ் விமர்சித்தார். ஆப்கானிஸ்தானில் ஓகஸ்ட் 2021இல் தலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததிலிருந்து பெண்கள் பொது வாழ்க்கையிலிருந்து முழுமையாக வெளியேற்றப்பட்டுள்ளார்கள். அவர்கள் பல்கலைக்கழகங்களுக்குச் செல்வதற்கும் பூங்காக்களிற்கச் செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. பல வேலைகளும் அவர்களுக்குத் தடை செய்யப்பட்டிருக்கின்றது.

"பெண்களின் உரிமைகள் விடயத்தில் ஏற்பட்ட மிகப் பெரும் பின்னடைவுக்கான மோசமான உதாரணம்" என்றும் அவர் தெரிவித்தார்.

உக்ரைன் போர் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிய 80 லட்சம் பேரில் பெண்களும் அவர்களது குழந்தைகளும் 90 சதவீதத்தினர், அதேநேரத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மில்லியன் கணக்கானவர்களில் பெண்களும் சிறுமிகளும் 70 சதவீதம் பேர் உள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"பெண்களும் பங்கெடுக்கக்கூடிய முயற்சிகள் மூலமான அமைதிதான் இவற்றுக்கெல்லாம் ஒரே தீர்வு" என்றும் பஹூஸ் தெரிவித்தார்.

ஐ.நா. 2000ஆம் ஆண்டு நிறைவேற் றிய, முரண்பாடுகளைத் தடுப்பதிலும் தீர்ப்பதிலும் பெண்களின் பங்கு தொடர்பான தீர்மானத்தை நடைமுறைப்படுத்த சரியான நடவடிக்கைகளை உலகத் தலைவர்கள் எடுக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பஹூஸின் கருத்துக்களை அமெரிக்க தூதர் லிண்டா தாமஸ்-கிரீன் ஃபீல்ட் ஆமோதித்தார்.





# பாகிஸ்தானில் ஹோலி பண்டிகை கொண்டாட்டங்கள்

பாகிஸ்தான் நாட்டில் வசித்து வரும் இந்து மக்கள் வண்ணங்களின் திருவிழாவான ஹோலி பண்டிகையை விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர். அது குறித்த வீடியோ சமூக வலைதளங்களில் கவனம் பெற்றுள்ளது. சினிமாபாடலுக்கு நடனமாடி, வண்ணங்களைப் பூசிக்கொண்டு தங்களது மகிழ்ச்சியை அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

பாகிஸ்தான் நாட்டில் வசித்துவரும் இந்துமக்களின் எண்ணிக்கை அந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் வெறும் 2 சதவீதம்தான் எனத் தகவல். அண்மைக் காலமாக அங்கு வசித்துவரும் இந்து மக்கள் தாக்குதலுக்கு ஆளாகிவருகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது. இந்த சவால்களை எல்லாம் கடந்தே அவர்கள் தங்கள் நம்பிக்கையை பின்பற்றி வருகின்றனர். அதோடு தங்களது கலாசார பாரம்பரியத்தை தவறாமல் கொண்டாடி வருகின்றனர். தீபாவளி, ஹோலி போன்ற பண்டிகைகள் இதில் அடங்கும்.

மற்றொரு புறம் கராச்சி பல்கலைக்கழகத்தில் ஹோலி பண்டிகை கொண்டாட்டத்தில் ஈடுபட்ட இந்து மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் ஹோலி கொண்டாடிய மாணவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது குறித்த வீடியோவும் சமூக வலைதளத்தில் கவனம் பெற்றுள்ளது.

# உங்கள் எதிர்காலத்தை யாரும் பறிக்க முடியாது

## போராடும் மக்களுக்கு ஆதரவாக ஜோர்ஜிய அதிபர் கருத்து

"உங்கள் எதிர்காலத்தை யாரும் பறிக்க முடியாது" என்று தெரிவித்திருக்கிறார் ஜோர்ஜிய அதிபர் சலோமி ஜோராபிச்விலி. தற்போது அமெரிக்காவில் இருக்கும் அவர், அங்கிருந்தபடி தனது நாட்டில் வீதிக்கு இறங்கிப் போராடும் மக்களுக்கு ஆதரவாக இப்படித் தெரிவித்திருக்கிறார்.

ஜோர்ஜிய நாடாளுமன்றம் சர்ச்சைக்குரிய "வெளிநாட்டு முகவர்கள்" சட்டத்தின் வரைவுக்கு முதல் கட்ட ஆதரவைத் தெரிவித்துள்ளன. இந்தச் சட்டம் ஜோர்ஜிய குடிமக்கள் வெளிநாடுகளில் உள்ளவர்களுடன் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுடன் அல்லது ஊடகங்களுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பவர்கள் அரசிடம் பதிவு செய்யவேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

ரஷ்யாவில் 2012ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ''வெளிநாட்டு முகவர்கள்" சட்டத்தை ஒத்திருக்கின்றது ஜோர்ஜியாவின் புதிய சட்டம் என்கிற விமர்சனங்கள் தீவிரமடைந்திருக்கின்றன. ரஷ்யாவில் உள்ள சட்டம் அந்த நாட்டு அரசுக்கு எதிராகக் கருத்துக்களைத் தெரிவிப்பவர்கள் மீது அடக்குமுறையை ஏவுவதற்குப் பயன்படுத்தப்படுவதாக மனித உரிமைகள் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

அண்மையில் திருத்தப்பட்ட ரஷ்ய சட்டம், "வெளிநாட்டுச் செல்வாக்குக்கு உட்பட்டவர்கள்" மற்றும் "வெளிநாடுகளில் இருந்து ஆதரவைப் பெறுவோர்" அனைவரையும் ''வெளிநாட்டு முகவர்கள்" என்று வரையறுக்கின்றது. அதாவது வெளிநாடுகளில் இருந்து பண உதவிகளைப் பெறுபவர்கள் மட்டுமல்லர், வேறு எந்தவகையிலான உதவிகளைப் பெறுபவர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் "வெளிநாட்டு முகவர்கள்" என்கிறது இந்தச் சட்டம்.

சேவியத் ஒன்றியக் காலத்தில் நடைமுறையில் இருந்த "மக்களின் எதிரிகள்" என்ற சொற்பதமே இப்போது "வெளிநாட்டு முகவர்களாக" மாறியிருக்கிறது என்கிறார்கள் விமர்சகர்கள். இந்தச் சட்டத்தின் கீழ் அரசியல் எதிர்ப் பாளர்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள் என்று அரசுக்குப் பிடிக்காத எவரை வேண்டுமானாலும் கைது செய்வதற்கான அதிகாரம் பொலிஸாருக்கு இருக்கின்றது.

அதேபோன்றதொரு சட்டத்தை நிறைவேற்றுவதற்கான முதல் படியையே ஜோர்ஜியாவும் எடுத்துள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தலைநகர் திபிலிசியில் ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்புகைக் குண்டுத் தாக்குதலையும் நீர்த் தாரைத் தாக்குதலையும் மேற்கொண்டனர். ஒருகட்டத்தில் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார் மீது போத்தல் குண்டுகளையும் வீசித் தாக்கினர்.



மக்களின் கோபத்தையும் ஆத்திரத்தையும் அடுத்து ஜோர்ஜிய அதிபர் சலோமி ஜோராபிச்விலி ஆர்ப்பாட்டக்காரர்களுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை தனது நீக்கும் அதிகாரத்தை (வீட்டோ) பயன்படுத்தி இல்லாது செய்வார் என்று உறுதியளித்தார்.

நான் உங்களுடன் நிற்கிறேன், ஏனென்றால் நீங்கள் இன்று சுதந்திர ஜோர்ஜியாவை பிரதிநிதித்துவப்படுத்துகிறீர்கள், ஐரோப்பாவிலேயே ஜோர்ஜியா தனது எதிர்காலத்தைக் கொண்டுள்ளது. அந்த எதிர்காலத்தை யாரும் திருடிச் செல்ல அனுமதிக்கமாட்டேன்" என்று அதிபர் தெரிவித்தார்.

ஜோர்ஜியா ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்வதற்கு விண்ணப்பித்துள்ளது. உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடங்கியதை அடுத்து உக்ரைன், ஜோர்ஜியா, மால்டோவா ஆகிய நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கு விண்ணப்பித்திருந்தன.

இந்த நிலையில் ஜோர்ஜிய நாடளுமன்றம் நிறைவேற்றிய இந்தச் சட்டம் "ஜோர்ஜிய ஜனநாயகத்தின் ஒரு இருண்ட நாள்" என்று ஜோர்ஜியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் கருத்துத் தெரிவித்துள்ளது. இத்தகைய நகர்வுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேரும் ஜோர்ஜியாவின் நோக்கத்துக்கு உதவாது என்றும் அது தெரிவித்துள்ளது.

# ஆஸி. பிரதமர் இந்தியாவில் சுற்றுப் பயணம்

ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் நான்கு நாள் சுற்றுப் பயணமாக இன்று இந்தியா வருகிறார். பிரதமராக பதவியேற்ற பிறகு அவர் இந்தியாவுக்கு முதல்முறையாக வருகிறார். கடந்த ஆண்டு மே மாதம் தொழிலாளர் கட்சி ஆஸ்திரேலியாவில் ஆட்சி அமைத்தது. ஆஸ்திரேலியாவில் இருந்து புறப்பட்டு தனது பயணத்தை அவர் தொடங்கியுள்ளார். இதனை ட்விட்டர் தளத்தில் அவர் பகிர்ந்துள்ளார்.

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த பயணம் அமைந்துள்ளதாக உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது. பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது, பொருளாதாரம், விளையாட்டு மற்றும் கல்வி உறவுகள் சார்ந்து இந்தப் பயணம் அமைந்துள்ளதாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் அந்தோணி அல்பானீஸ் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவு செய்திருந்தார்.

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளதையும் கீச்சகத்தில் பகிர்ந்துள்ளார் அந்தோணி அல்பானீஸ். இன்று மாலை சபர்மதியில் அமைந்துள்ள காந்தி ஆசிரமத்திற்கு அவர் செல்கிறார். தொடர்ந்து ஆளுநர் மாளிகையில் நடைபெறும் ஹோலி கொண்டாட்ட நிகழ்வில் பங்கேற்கிறார்.

நாளை இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 4வது டெஸ்ட் போட்டியை பிரதமர் மோடி உடன் இணைந்து பார்க்க உள்ளார். இந்தப் போட்டி நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற உள்ளது. தொடர்ந்து நாளை மாலை அவர் மும்பை செல்கிறார்.

மார்ச் 10ம் தேதி ராஷ்டிரபதி பவனில் நடைபெறும் வரவேற்பு நிகழ்வில் பங்கேற்கிறார். பின்னர் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்திக்கிறார். பிரதமர் மோடி மற்றும் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை அவர் சந்திக்கிறார். இரு நாட்டு வணிக உறவு சார்ந்தும் இந்தப் பயணத்தின் போது பேசப்படும் என தெரிகிறது. வரும் 11ம் தேதி தனது இந்திய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு அவர் நாடு திரும்புகிறார்.



# டாக்கா வெடி விபத்தில் 14 பேர் அநியாயச் சாவு

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிலுள்ள 7 மாடிக் கட்டடத்தில் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட வெடிவிபத்தில் 14 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பழைய டாக்கா நகரில் உள்ள குலிஸ்தான் பகுதியில் உள்ள 7 மாடிக் கட்டடத்திலேயே குண்டு வெடித்தது. இந்தக் கட்டடத்தில் வங்கி அலுவலகம், கடைகள், அலுவலகங்கள் இயங்கி வந்தன. மேலும் தரைத் தளத்தில் வேதியியல் பொருட்கள் வைக்கப்பட்டு இருந்தது எனவும் தெரிகிறது. இந்த நிலையில் மாலை 4.50 மணிக்கு கட்டடப் பகுதியில் பயங்கர வெடிச்சத்தம் கேட்டது. இதனால் அந்தப் பகுதியில் ஏதோ குண்டுவெடித்தது என்று மக்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினர்.

சம்பவ இடத்துக்கு தீயணைப்புப் படையினரும், பொலீஸாரும் விரைந்தனர். அங்கிருந்த இடிபாடுகளை அவர்கள் அகற்றி மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இந்த வெடிவிபத்தில் இதுவரை 14 பேர் உயிரிழந்தனர் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேலும் காயமடைந்த 100க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு அருகிலுள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தீயணைப்புப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வெடிவிபத்துக்கான சரியான காரணம் தெரியவில்லை. இருப்பினும், அந்தக் கட்டடத்தின் தரைப்பகுதியில் சட்டவிரோதமாக வேதியியல் பொருட்களை சேகரித்து வைத்து இருந்தார்கள் என்றும், அதுவே வெடிவிபத்துக்குக் காரணமாக இருந்திருக்கலாம் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# ரஷ்ய எதிராளியைத் தோற்கடித்து உக்ரைன் வீராங்கனை வெற்றி

## அமெரிக்காவில நடந்த டென்னிஸில் உணர்ச்சிப் பெருக்கு



அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஆஸ்டின் நகரில் மகளிருக்கானஏடீஎக்ஸ்ஓபன்டென்னிஸ் தொடர் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் உலகளவில் 52ஆம் நிலை வீராங்கனையான உக்ரைனின் மார்டா கோஸ்ட்யுக், 66ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் வர்வரா கிரச்சேவாவை எதிர்த்து விளையாடினார். ஒரு மணி நேரம் 31 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 20 வயதான மார்டா கோஸ்ட்யுக் 63, 75 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று சாம்பியன் பட்டம் வென்றார்.


சர்வதேச டென்னிஸ் அரங்கில் மார்டா கோஸ்ட்யுக் வெல்லும் முதல் பட்டம் இதுவாகும். வர்வரா கிரச்சேவாவை வீழ்த்தியதும் டென்னிஸ் களத்தில் கண்ணீர் விட்டு அழுதார் மார்டா கோஸ்ட்யுக். போட்டி முடிவடைந்ததும் பரஸ்பரம் வீராங்கனைகள் கைகுலுக்கிக் கொள்வது வழக்கம். ஆனால் மார்டா கோஸ்ட்யுக், வர்வரா கிரச்சேவாவுடன் கைகுலுக்காமல் விலகிச் சென்றார்.

மார்டா கோஸ்ட்யுக் கூறும்போது, தற்போது நாங்கள் இருக்கும் நிலையில் இந்தப் பட்டத்தை வென்றதை மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதுகிறேன். இந்தக் கோப்பையை உக்ரைனுக்கும், களத்தில் போராடி இறக்கும் அனைத்து மக்களுக்கும் அர்ப்பணிக்கிறேன் என்றார்.

ஏடீஎக்ஸ் தொடரில் பட்டம் வென்றதன் மூலம் மார்டா கோஸ்ட்யுக், டென்னிஸ் தரவரிசை பட்டியலில் 40ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

# அமெரிக்க டென்னிஸ் ஜெகோவிச் விலகல்

## கொரோனா ஊசி போடாததே காரணம்



இந்தியன் வெல்ஸ் ஓபன் டென்னிஸ் தொடரில் இருந்து உலகின் முதல்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜெகோவிச் விலகி உள்ளார் என்று போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள இந்தியன் வெல்ஸ் நகரில் ஆயிரம் புள்ளிகள் கொண்ட இந்தியன் வெல்ஸ் ஓபன் ஏடிபி தொடர் இன்று தொடங்கி மார்ச் 19 வரை நடைபெற உள்ளது.

இந்தத் தொடரில் இருந்தே முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் விலகி உள்ளார். ஜோகோவிச்சுக்கு பதிலாக ஜோர்ஜியாவின் நிகோலோஸ் பாசிலாஷ்விலி சேர்க்கப்பட்டுள்ளார்.

கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி செலுத்திக் கொள்ளாததால் ஜோகோவிச்சால் அமெரிக்காவுக்குள் நுழைய முடியவில்லை. இந்தியன் வெல்ஸ் தொடரில் கலந்துகொள்வதற்காக தனக்கு சிறப்பு அனுமதி வழங்கக் கோரி அமெரிக்க அதிகாரிகளிடம் ஜோகோவிச் மனுச்செய்திருந்தார். இந்த மனு நிராகரிக்கப்பட்டதாக தெரிகிறது. இதைத் தொடர்ந்தே ஜோகோவிச், இந்தியன் வெல்ஸ்தொடரில் இருந்து விலகி உள்ளார் என்று டென்னிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத சர்வதேசப் பயணிகளை நாட்டிற்குள் நுழைய அமெரிக்கா இன்னும் அனுமதி வழங்கவில்லை. இந்தக் கொள்கையில் வரும் ஏப்ரல் மாத நடுப்பகுதி வரை எந்தவித மாற்றமும் இருக்காது என அந்நாட்டின் போக்குவரத்து பாதுகாப்பு நிர்வாகம் சமீபத்தில் சுட்டிக்காட்டி இருந்தது என்பது.

இந்தியன் வெல்ஸ் தொடரை தொடர்ந்து நடைபெற உள்ள மியாமி ஓபனிலும் ஜெகோவிச் கலந்துகொள்வது சந்தேகம் என்றே தெரிகிறது.

கொரோனாதடுப்பூசிவிவகாரத்தால் கடந்த 2022ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய ஓபனில் பங்கேற்க சென்றிருந்த ஜெகோவிச் அங்கிருந்து வெளியேற்றப் பட்டார். அதே ஆண்டில் விம்பிள்டனில் பட்டம் வென்ற அவர், பயண கட்டுப்பாடுகள் காரணமாக அமெரிக்க ஓபன் தொடரையும் தவறவிட்டார்.

இந்த ஆண்டில் ஆஸ்திரேலிய ஓபனில் பங்கேற்க ஜெகோவிச்சுக்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற தொடரில் சாம்பியன் பட்டம் வென்று அசத்தினார். இது அவரது 22ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகவும் அமைந்திருந்தது. கடந்த வாரம் துபாய் டென்னிஸ் தொடரில் விளையாடிய ஜோகோவிச் அரை இறுதி ஆட்டத்துடன் வெளியேறி இருந்தார்.

# மும்பைக்கு வெற்றி

மகளிர் ஐபிஎல் போட்டியின் 4ஆவது ஆட்டத்தில் மும்பை இண்டியன்ஸ் 9 இலக்குகள் வித்தியாசத்தில் ரோயல் சேலஞ்சாஸ் பெங்களூரை திங்கள்கிழமை வென்றது.

மும்பையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பெங்களூா 18.4 ஓவாகளில் 10 இலக்குகளையும் இழந்து 155 ஓட்டங்களே சோத்தது. அடுத்து ஆடிய மும்பை 14.2 ஓவாகளில் 1 இலக்கை மட்டும் இழந்து 159 ஓட்டங்கள் எடுத்து வென்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூரில் அதிகபட்சமாக ரிச்சா கோஷ் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸா உள்பட 28 ஓட்டங்கள் அடித்தார். எஞ்சியோரில் கேப்டன் ஸ்மிருதி மந்தனா 5 பவுண்டரிகளுடன் 23, சோஃபி டிவைன் 16, தீக்ஷா கசத் 0, எலிஸ் பெரி 13, ஹீதா நைட் 0, கனிகா அஹுஜா 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 22, ஷ்ரேயங்கா பாட்டீல் 4 பவுண்டரிகளுடன் 23, மீகன் ட் 3 பவுண்டரிகளுடன் 20, ரேணுகா சிங் 2 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனா்.

மும்பை அணியில் ஹேலி மேத்யூஸ் 3, சாய்கா இஷாக், எமிலியா கொ ஆகியோா் தலா 2, நேட் ஸ்கீவா, பூஜா வஸ்த்ரகா ஆகியோா் தலா 1 விக்கெட் சாய்த்தனா்.

பின்னா மும்பை இன்னிங்ஸில் யஸ்திகா பாட்டியா 4 பவுண்டரிகளுடன் 23 ஓட்டங்களுக்கு வெளியேற, ஹேலி மேத்யூஸ் – நேட் ஸ்கீவா கூட்டணி மும்பையை வெற்றிக்கு வழி நடத்தியது. இலக்கை எட்டுகையில் மேத்யூஸ் 13 பவுண்டரிகள், 1 சிக்ஸா உள்பட 77, ஸ்கீவா 9 பவுண்டரிகள், 1 சிக்ஸா உள்பட 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனா்.

பெங்களூர் அணியில் பிரீத்தி போஸ் 1 விக்கெட் கைப்பற்றியிருந்தார்.

# பங்களாதேஷுக்கு ஆறுதல் வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

சிட்டோ கிராமில் நேற்று நடைபெற்ற 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வங்கதேச அணி 48.5 பந்துவீச்சுக்களில் 246 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கிப் அல் ஹசன் 75, முஷ்பிகுர் ரகிம் 70 ஓட்டங்கள் எடுத்தனர்.

247 ஓட்டங்கள் இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி 43.1 ஓவரில் 196 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக ஜேம்ஸ் வின்ஸ் 38, ஃபில் சால்ட் 35, கிறிஸ் வோக்ஸ் 34 ஓட்டங்கள் சேர்த்தனர். வங்கதேச அணி சார்பில் கிப் அல் ஹசன் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணிக்கு இது ஆறுதல் வெற்றியாக அமைந்தது. முதல் இரு போட்டியிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருந்ததால் 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரை 2–1 என்ற ரீதியில் கைப்பற்றிக் கோப்பையை வென்றது.

# டு பிளெஸ்ஸியை தெ.ஆ. அணிக்குள் கொண்டுவர முயற்சி



ரி20 லீக் போட்டிகளில் சிறப்பாக விளையாடி வரும் தென்னாப்பிரிக்க வீரர் டு பிளெஸ்சிஸைத் தென்னாப்பிரிக்க அணியில் மீண்டும் சேர்க்கப் பேச்சு நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்னாப்பிரிக்காவின் வெள்ளைப் பந்துப் பயிற்சியாளராக ராப் வால்டர் நியமிக்கப்பட்டதையடுத்து டு பிளெஸ்சிஸை தென்னாப்பிரிக்க அணியில் சேர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான ரி20 தொடரில் டு பிளெஸ்சிஸ் சேர்த்துக்கொள்ளப்படுவார் எனக் கூறப்பட்டது. எனினும் அவருக்கு இடம் கிடைக்கவில்லை.

டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றுள்ள டு பிளெஸ்சிஸ், இன்னும் வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் விளையாட ஆர்வமாக உள்ளார். 2021, 2022 ரி20 உலகக் கோப்பைப் போட்டிகளில் டு பிளெஸ்சிஸ் விளையாடாமல் போனாலும் உலகெங்கும் நடைபெறும் ரி20 லீக் போட்டிகளில் தொடர்ந்து விளையாடி வருகிறார். கடைசியாக டெஸ்டில் விளையாடிய பிறகு இதுவரை ரி20 லீக் போட்டிகளில் 90 ஆட்டங்களில் விளையாடியுள்ளார்.

தென்னாப்பிரிக்க கிரிக்கெட் சபையின் இயக்குநர் இனாக் இதுபற்றித் தெரிவித்ததாவது:

உலகக் கோப்பைப் போட்டிக்கு முன்பு தேர்வுக்குழு, பயிற்சியாளர் ஆகியோரிடம் டு பிளெஸ்சிஸ் பற்றி பேச்சு நடைபெற்றது. ஆனால் ஒரு முடிவும் எட்டப்படவில்லை. இது தொடர்பான பேச்சில் ஈடுபட விருப்பமாக உள்ளோம். நல்ல வழி கிடைக்கும் என நம்புகிறோம். ஒப்பந்தத்தில் இல்லாத வீரர்களுடனும் பேச்சில் ஈடுபட ஆர்வமாக உள்ளோம்.

பயிற்சியாளர் ராப் வால்டர் இதுபோன்ற உரையாடலில் மிகவும் ஆர்வத்துடன் உள்ளார். டெஸ்ட், ஒருநாள், ரி20க்கு என வீரர்களுக்குத் தனித்தனியாக ஒப்பந்தங்களை வழங்குவது பற்றியும் ஆலோசித்து வருகிறோம் என்றார்.

# டெல்லிக்கு 2ஆவது வெற்றி

மகளிர் ஐபிஎல் கிரிக்கெட்டில் 5ஆவது ஆட்டத்தில் டெல்லி கேப்பிட்டல்ஸ் 42 ஓட்டங்கள் வித்தியாசத்தில் யுபி வோரியாஸை செவ்வாய்க்கிழமை வென்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் டெல்லி கேப்பிட்டல்ஸ் 20 ஓவர்களில் 4 இலக்குகள் இழப்புக்கு 211 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்து யுபி 20 ஓவாகளில் 5 இலக்குகளை இழந்து 169 ஓட்டங்களே சேர்த்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற யுபி, ஃபீல்டிங்கை தேர்வு செய்தது. டெல்லி துடுப்பாட்டத்தில் முதல் விக்கெட்டாக ஃபாலி வாமா 1 பவுண்டரி, 1 சிக்ஸா உள்பட 17 ஓட்டங்கள் அடித்து வீழ்ந்தார். தொடாந்து வந்த மாரிஸேன் காப் 2 பவுண்டரிகளுடன் 16 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

மறுபுறம், அதுவரை விக்கெட்டை இழக்காமல் ஓட்டங்கள் சோத்த மெக் லேனிங், 42 பந்துகளில் 10 பவுண்டரிகள், 3 சிக்ஸாகள் உள்பட 70 ஓட்டங்கள் விளாசி வெளியேறினார். கடைசி விக்கெட்டாக அலிஸ் கேப்சி 1 பவுண்டரி, 2 சிக்ஸாகள் உட்பட 21 ஓட்டங்களுக்கு விக்கெட்டை இழந்தார்.

ஓவாகள் முடிவில் ஜெமிமா ரோட்ரிக்ஸ் 4 பவுண்டரிகள் உட்பட 34, ஜெஸ் ஜோனசென் 3 பவுண்டரிகள், 3 சிக்ஸாகள் உள்பட 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனா. யுபி தரப்பில் ப்னிம் இஸ்மாயில், ராஜேஷ்வரி கெய்க்வாட், டாலியா மெக்ராத், சோஃபி எக்லஸ்டன் ஆகியோர் தலா 1 விக்கெட் சாய்த்தனா்.

அடுத்து, 212 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இன்னிங்ஸை தொடங்கிய யுபியில், டாலியா மெக்ராத் 50 பந்துகளில் 11 பவுண்டரிகள், 4 சிக்ஸாகள் உள்பட 90 ஓட்டங்கள் விளாசி இறுதிவரை ஆட்டமிழக்காமல் போராடினார். சிம்ரன் கே 6 ஓட்டங்களுடன் அவருக்குத் துணை நின்றார். அணித் தலைவர் அலிசா ஹீலி 24, ஷ்வேதா ஷெராவத் 1, கிரண் நவ்கிரே 2, தீப்தி சாமா 12, தேவிகா வைத்யா 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனா்.

டெல்லி பந்துவீச்சில் ஜெஸ் ஜோனசென் 3, மாரிஸேன் காப், ஷிகா பாண்டே ஆகியோா தலா 1 இலக்கைக் கைப்பற்றினார்.

# பவுமா நீக்கம்



தென்னாப்பிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்து வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி, 2 டெஸ்ட், 3 ஒருநாள், 3 ரி20 ஆட்டங்களில் விளையாடுகிறது.

இந்நிலையில் ரி20 தொடருக்கான தென்னாப்பிரிக்க அணி இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. தெ.ஆ. ரி20 அணியின் புதிய தலைவராக மார்க்ரம் அறிவிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்பு ரி20 உலகக் கோப்பைப் போட்டியில் தெ.ஆ. அணியின் தலைவராக இருந்தவரான பவுமா தற்போது அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். ரி20 லீக் போட்டிகளில் சிறப்பாக விளையாடி வரும் டு பிளெஸ்சிஸை அணியில் சேர்க்க வேண்டும் என்கிற கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஒருநாள் தொடருக்கான தெ.ஆ. அணியின் தலைவராகப் பவுமா அறிவிக்கப்பட்டுள்ளார். தெ.ஆ. வெள்ளைப் பந்து அணிகளின் துடுப்பாட்ட பயிற்சியாளராக டுமினி நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஐசிசி விருதுக்கு ஜடேஜா பெயர்



ஆடவர் பிரிவில் சிறந்த வீரருக்கான ஐசிசி மாதாந்த விருதுக்கு இந்தியாவின் ஜடேஜா பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாகப் பந்துவீசி வருகிறார் இந்திய அணியின் சகலதுறை ஆட்டக்காரர் ஜடேஜா. 3 டெஸ்டுகளில் 21 விக்கெட்டுகள் எடுத்து இத்தொடரில் அதிக விக்கெட்டுகள் எடுத்த வீரர்களில் முதலிடத்தில் உள்ளார். இதையடுத்து ஆடவர் பிரிவில், பிப்ரவரி மாதத்துக்கான சிறந்த வீரருக்கான ஐசிசி விருதுக்கு ஜடேஜா பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

மேலும் இங்கிலாந்து பேட்டர் ஹாரி புரூக் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் வீரர் மோட்டீ ஆகியோரும் இந்த விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்கள். கடந்த டிசெம்பர் மாதம், சிறந்த வீரராகப் புரூக் தேர்வானார். சமீபத்தில், நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இரு டெஸ்டுகளில் 329 ஓட்டங்கள் எடுத்தார் புரூக்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.03.2023 இல் வெளியிடப்பெற்றது.